விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | கார்த்திகை 01 | செவ்வாய்க்கிழமை | (16.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 333

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிறந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## போக்குவரத்துச் சபைக்கு எதிராக நாவற்குழிச் சந்தியில் மறியல்போர்!

### ஏ-9 வீதி நண்பகல்வரை நேற்றும் ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

பஸ்ஸிற்காக காத்திருந்த பாடசாலை மாணவர்களை வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்கள் எவையும் ஏற்றிச்செல்லாததைக் கண்டித்து வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கெதிராக நேற்று நாவற்குழிச் சந்தியில் மறியல் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

நாவற்குழி முந்நூறு வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் யாழ். நகரப் பாடசாலையில் கல்வி கற்கும் சுமார் 85 பாடசாலை மாணவர்கள் பஸ்ஸிற்காக நேற்றுக் காலை நாவற்குழிச் சந்தியில் காத்திருந்தனர். எனினும் அவர்களை வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் எவையும் ஏற்றிச் செல்லவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் காலை 9 மணி தொடக்கம் கண்டி வீதியூடான போக்குவரத்தை நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற சாவகச்சேரி பொலிஸாரும், நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டன் வைத்தியசாலையில் கரவெட்டி பெண் மரணம்!

(கரவெட்டி)

கரவெட்டியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் லண்டன் வைத்தியசாலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்த அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொண்டபோது அவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

கரவெட்டி மத்தனையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயாரான யோ. ஸ்ரீரஜனி (வயது 30) என்பவரே உயிரிழந்தவராவார். (ச)

## ஒஸ்லோ – டோக்கியோ முடிவுகளுக்கு ஐ.தே.க. ஆதரவு

# சமாதான முயற்சிகளை மீளவும் ஆரம்பிக்க ஜே.வி.பியே தடை!

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் குற்றச்சாட்டு



(நமது நிருபர்)

**இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், தேக்கமடைந்திருக்கும் சமாதான முயற்சிகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பியே தடையாக இருக்கிறதென்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.**

சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதில் அரசிற்குள்ளேயே தடைகள் காணப்படுகின்றதென்று சுட்டிக்காட்டி கருத்து வெளியிட்டபோதே ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், ஜே.வி.பியின் நடவடிக்கையினால் சமாதான முயற்சிகள் பெரும் பின்னடைவை எதிர்கொண்டுள்ளது. ஜே.வி.பியின் இந்த நடவடிக்கைகள் தடைப்பட்டு, நாட்டு நிலைமைகள் மேலும் மோசமடையும். இதனால் பாதிக்கப்படப்போவது நாட்டு மக்களே தவிர ஜே.வி.பி. அல்ல.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒஸ்லோவில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமையவும் டோக்கியப் பிரகடனத்திற்கு அமையவும் எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும் நாம் எமது ஆதரவினை வழங்குவோம். எதிர்க்கட்சிக்கும் ஜனாதிபதிக்கும் இடையே பிரச்சினைகள் இல்லை. அரசுக்கு ஜே.வி.பியுடன் தான் பிரச்சினைகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மத்திய கல்லூரி மாணவ சமூகம்

## தேசியத் தலைவர் பிரபாவுக்கு கேடயம் வழங்கி வாழ்த்து!



(யாழ்ப்பாணம்)

தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் ஐம்பதாவது வயதுப் பூர்த்தியை முன்னிட்டு யாழ். மத்திய கல்லூரி மாணவ சமூகம் கேடயம் ஒன்றை வழங்கி வாழ்த்தவுள்ளது.

"சிதைக்கப்பட்ட தமிழீழ மாணவரை சிந்திக்க வைத்த எம் தேசியத் தலைவனை அகவை ஐம்பதில் வாழ்த்துகிறோம்" என பொறிக்கப்பட்ட தேசியத் தலைவருக்கான கேடயத்தை யாழ். மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர்கள் கிளிநொச்சிக்கு எடுத்துச் சென்று கையளிக்கவுள்ளனர். (ச)

## போரில் பாதிப்புற்ற மக்களையே கட்சி முரண்பாடு பாதிக்கின்றது

### ஜனாதிபதி சந்திரிகா கவலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைப்பதிலும் பார்க்க நாட்டில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் இடையில் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதே மிகக் கஷ்டமான காரியம் என்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.



பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உயர் தொழில் புரிவோர் சங்கத்தின் மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்கு ஐக்கிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ சாரதிக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் நேற்று முன்தினம் விபத்துக்குள்ளான இராணுவ பவுஸர் வாகனத்தைச் செலுத்திய சாரதியான இராணுவச் சிப்பாயை நேற்று முன்தினம் இரவு கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி பதில் நீதிபதி எஸ்.கந்தசாமி முன்னிலையில் அவரது வீட்டில் ஆஜர்ப்படுத்தினர்.

ஆஜர்படுத்தப்பட்ட முதியான் சலாகே விஜயசிங்க என்ற பிரஸ்தாப சிப்பாயை நாளை புதன்கிழமைவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-16)

## கிணற்றுள் தவறி விழுந்து பெண் குழந்தை மரணம்

### யாழ். பொம்மைவெளியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றுக்குள் தவறி விழுந்த குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது. இச் சம்பவம் நேற்று யாழ்ப்பாணம் பொம்மைவெளியில் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குழந்தையின் தாயார் சமையலில் ஈடுபட்டிருந்தவேளை வெளியே சென்ற குழந்தை கட்டுக்கல் இல்லாத கிணற்றினுள் தவறி விழுந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுதாகரன் ஜென்சிகா என்ற ஒன்றரை வயது பெண் குழந்தையே உயிரிழந்தவராவார். சடலம் உடனடியாக யாழ்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

⏭ க.பொ.த (சா/த) மாதிரி வினாத்தாள். விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் - பகுதி-11

⏭ காஞ்சிபுரத்தில் படிந்த கறை...



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இன்று ஒரு தகவல்

# மனமும் உடலும்

மனம் நன்றாக இருந்தால் உடல் நன்றாக இருக்கும். உள்ளம் ஆரோக்கியமாக இருப்பவர்களுக்கு உடலும் ஆரோக்கியமாக இருக்கும். உள்ளத்தில் தெம்பும் மகிழ்ச்சியும் இருந்தால் நோயும் சோர்வும் அணுகுவதில்லை. நாம் மனம்கசந்து போயிருந்தால் நமக்கு நோய் வருவதற்கான சந்தர்ப்பமும் அதிகம்.

இரண்டு பேருக்கு ஒரேவிதமான நோய். அதில் ஒருவர் மனத்தெம்பு உள்ளவர். இன்னொருவர் மனத்தெம்பு இல்லாதவர். இந்த இரண்டு பேருக்கும் ஒரே விதமான மருந்தைக் கொடுக்கின்றனர். மனத்தெம்பு உள்ளவருக்கு சுலபமாகக் குணமாகிவிடுகிறது. இன்னொருவருக்கு காலதாமதமாகிறது.

மருத்துவ ஆராய்ச்சி நிபுணர்கள் பலவிதமான சோதனையெல்லாம் செய்து பார்த்துவிட்டு இதைச் சொல்கின்றனர். வாழ்க்கையின் உண்மைகளை லேசாக எடுத்துக் கொண்டு சிரித்த முகத்துடன் கவலை இல்லாமல் வாழ்வோரிடம்நோய்கள் நெருங்குவதில்லை. மேரிலாண்டில் உள்ள மன இயல்பு ஆராய்ச்சி நிபுணர் மைக்கேல் ர.்.ப் இதைச் சொன்னார்.

வழக்கம் போல இதிலும் எலியை வைத்துச் சில ஆராய்ச்சிகளைச் செய்தனர். இரண்டு பிரிவு எலிகளில் ஒரு பிரிவு எலிகளை அமைதியாக இருக்கும்படியும் மற்றைய பிரிவை கலக்கத்துடனும் இருக்கும்படி செய்தனர். அதைியாக இருந்த எலிகளுக்கு நோய் எதிர்ப்புத்திறன் அதிகமாக இருந்தது. அமைதியின்றி இருந்த எலிகள் தொற்று நோயினால் சீக்கிரம் பாதிப்படைந்து இறந்துவிட்டன.

நமது உடலுக்கு ஏதாவது சிரமம் வரும் போது எல்லாம் அட்ரினலின் சுரப்பிகளுக்கு மூளை எச்சரிக்கை கொடுக்கிறது. அதனால் மூளைவிறுவிறுப்பாக வேலை செய்யத் தூண்டப்படுகிறது. அதனால் தெளிவாகவும் மனதில் கலக்கம் இல்லாமலும் இருக்கக் கூடிய நிலையில் இந்த சுரப்பிகள் சரியாகப் பக்குவமாக இயங்குகிறது. அப்படி இல்லாத நிலையில் எதிர்ப்புத்திறன் குறைந்துபோகும்.

இது சாதாரண நோய்க்கு மட்டுமல்லாது தொற்று நோய்க்கும் பொருந்தும் என்று இப்போது கண்டுபிடித் திருக்கின்றனர். தொற்று நோய் பரவுவதற்கு உணவு, நீர், காற்று போன்றவற்றினால் வரும் கிருமிகள் தரக்கூடிய பாதிப்புக்கள் தான் அடிப்படைக் காரணம் என்று தெரியும்.

அதேபோல் முதுமை, பலவீனம், உடல் சோர்வு, சத்துணவு இல்லாத நிலைகள் கூட தொற்று நோய் பரவக் காரணம் என்று நமக்குத் தெரியும். ஆனால் மன அமைதி உள்ள நிறைவு மனமகிழ்ச்சி போன்றவையெல்லாம் நம்மை இந்த நோய்களின் பாதிப்பிலிருந்து காப்பாற்றும் என்றோ மனச்சலிப்பு, துயரம், மனக்கசப்பு, மன அமைதிக்குறைவு போன்றன இந்த நோய்களின் பாதிப்பைத் தூண்டும் என்றோ இது வரையில் நமக்கு யாரும் சொன்னதில்லை.

இங்கிலாந்தில் சாலிஸ்பரில் என்ற ஒரு ஊரில் ஆராய்ச்சி ஒன்று நடந்தது. ஜலதோசம், இருமல், கபம் தொடர்பாக ஆராய்ச்சி செய்யும் நிபுணர்கள் புதிதாக ஒரு உத்தியைக் கையாண்டனர். 50 பேரில் 25 பேருக்கு இந்தத் தொல்லைகளைத் தடுக்கக் கூடிய மருந்து மாத்திரைகளைக் கொடுத்தனர்.

இன்னொரு 25 பேரிடம் சொன்னார்கள் இந்த மருந்து கொடுத்தும் உங்களுக்குச் சரியாகாவிட்டால் உங்கள் வயிற்றுக்குள்ளே குழாயைச் செலுத்தி ஜீரண நீரை வெளியே எடுத்துச் சோதனையிட வேண்டிவரும் என்று எச்சரித்தனர். அவ்வளவு தான் அவர்களுக்குப் பயம் வந்துவிட்டது. மாத்திரை மட்டும்சாப்பிட்டவர்கள் சரியாகி விட்டனர். பயந்தவர்களுக்கு இன்னும் பாதிப்பு அதிகமாகிவிட்டது.

இதிலிருந்து என்ன தெரிகின்றதென்றால் மனக் கவலையும் பயமும் கலக்கமும் உண்டாகும் போது உடலில் இயல்பாக இருக்கக் கூடிய எதிர்ப்புத்திறன் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது. அந்த ஆராய்ச்சி நிலையம் வெளியிட்டிருக்கும் முடிவு இது.

பற்றில்லாமல் ஒவ்வொரு காரியத்தையும் கடமை உணர்வுடன் செய்யும் போது அதன் வெற்றி தோல்வி நம்மைப் பாதிப்பது இல்லை. அதனால் மனக் கவலை இல்லாமல் வாழ முடியும். சுருக்கமாகச் சொல்லப் போனால் எதற்கும் கவலைப்படாதீர்கள். பயப்படாதீர்கள். பதவி, பணம், புகழ் இவற்றை நினைத்து அலட்டிக்கொள்ளாதீர்கள். அப்படி இருந்து அனுபவித்துப் பார்த்தால்தான் அதன் அருமை புரியும்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பை அரசு ஏற்றுக்கொண்டு பேச்சை ஆரம்பிக்க வேண்டும்

## கலாநிதி குமார் ரூபசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷடி முறையிலான தீர்வே சிறந்தது என சகவாழ்வு மையத்தின் தலைவர் கலாநிதி குமார் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.



சமாதானத்திற்கான ஆய்வகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கருத்தரங்கு நேற்று முன்தினம் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 56 ஆண்டு கால வரலாற்றை நோக்கும்போது ஆட்சி செய்கின்ற கட்சி ஒரு முடிவை எடுக்கின்ற பொழுது எதிர்க்கட்சி அதற்கு எதிராகச் செயற்பட்டு வந்துள்ளமையை அறியலாம்.

1957 ஆம் ஆண்டு பண்டா-செல்வா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு எதிர்க்கட்சியின் எதிர்ப்புக் காரணமாக அது கிழித்தெறியப்பட்டது.

அதன் அடிபபடையில் அண்மைக்கால வரலாற்றை எடுத்துப் பார்க்கின்றபொழுது 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலேயே ஒரு புதிய அரசியல் யாப்பிற்கான வரைவு முன்வைக்கப்பட்டபோது பாராளு மன்றத்திலேயே அவ்வரைவு கிழித் தெறியப்பட்டது.

தெனனிலங்கையில் உள்ள இரு பிரதான கட்சிகளும் ஒரு குறிப்பிட்ட முடிவை எடுப்பதற்குத் தொடர்ந்தும் தயங்கிக்கொண்டிருக்கின்றன.

வரலாற்றுரீதியாக இந்த இரு கட்சிகளும் ஆட்சி அதிகாரத்திற்குத்தான் கூடிய கவனம் செலுத்துகின்றதே தவிர இந்த நாட்டினுடைய ஒரு தேசியப் பிரச்சினையை ஒரு முழுமனத்துடன் தீர்ப்பதற்கான ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவது கிடையாது.

இந்த நிலையில் இராணுவ சமநிலையின் அடிப்படையிலேயே எமது நாட்டில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன என்றஅடிப்படையில் எல்லாச் சந்தர்ப்பங்களிலுமதனை ஏற்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடரவேண்டும் எனத் தெரிவித்த அவர், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள நிர்வாகக கட்டமைப்பையும் ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (04)

# மீண்டும் ஓர் போர் ஏற்படுமென்ற அச்சத்தில் யாழ். குடாநாட்டு மக்கள்

## போலா கிறீன் குறூப் பிரதிநிதிகளிடம் இணையப் பிரதிநிதிகள் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்கள இன்னமும் இராணுவமயப்படுத்தப்பட்ட பிரதேசத்திலேயே வாழ்ந்து வருகின்றனர்.

மீண்டும் யுத்தம் வந்துவிடுமோ என்ற அச்சம் இப்போது யாழ். குடாநாட்டு மக்களின் மனங்களில் பரவலாகக் குடிகொண்டுள்ளது. நாட்டில் கௌரவமான, நிலையான சமாதானம் ஒன்று ஏற்படவேண்டும் என்றே குடாநாட்டு மக்கள் விரும்புகின்றனர். யுத்தத்தை எமது மக்கள் இப்போது அடியோடு வெறுக்கின்றார்கள்.

சமாதான நிலைப்பாடு தொடர்பான நிலைமையை ஆராயவதற்கென யாழ்ப்பாணத்திற்கு வந்த போலா கிறீன் குறூப் மற்றும் வன்முறையற்ற சமாதானக் குழுவின் பிரதிநிதிகளிடம் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

இணையத்தின் தலைவர் வீ.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் இணையப்பிரதிநிதிகள் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமாயின சமாதானப் பணிகளை தென்னிலங்கையிலேயே முன்னெடுக்க வேண்டியது அவசியம். அதை விடுத்து யாழ். குடாநாட்டில் நீடித்த சமாதானத்தை ஏற்படுத்துவதற்கென வேலை செய்ய வேண்டிய அவசியம் எதுவும் எழவில்லை.

குடாநாட்டு நிலைமைகள் வர வர மோசமாகிக் கொண்டு போகின்றன. இந்த நிலையில், நாட்டில நிரந்தரமான நீடித்த சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள் தமது விழிப்புணர்வு குறித்த நடவடிக்கைகளைத் தென்பகுதியில் செய்வதுதான் உசிதமானதாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. எனவே, வெளிநாட்டு நிறுவனங்கள் இக்கால கட்டத்தில் தென்பகுதி மக்கள் மத்தியில் தமது பணிகளைத் தீவிரமாக முடுக்கிவிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். (ற-16)

## இராசி பலன்

**16.11.2004**

**(கார்த்திகை 01, செவ்வாய்க்கிழமை)**

**சதுர்த்தி நண்பகல் 12.00 மணிவரை**

**பூராடம் பின்னிரவு 2.29 மணிவரை**

**இராகுகாலம்- 3.08- 4.38 மணிவரை**

**சுபநேரம்-10.38-12.08 மணிவரை**

**ஸ்கந்த சஷ்டி விரதம்-4ம் நாள்**

**மேடம்** புதிய திட்டமிடல், காரிய தாமதம், பிதா சிந்தை, பிரயாணம்.

**இடபம்** எதிர்பாராத பிரச்சினை, ரோக பயம், காரிய தடங்கல், கடன்தொல்லை.

**மிதுனம்** களஸ்திர நன்மை, முயற்சி கைகூடும், பிரயாண நன்மை, நண்பர்கள் சந்திப்பு.

**கடகம்** தேக நலன், பகைவர் நேசம், தொழில் விருத்தி, பணவருவாய்.

**சிங்கம்** குடும்பக் கவலை, காரிய தாமதம், ரோக நிலை, பணவிரயம்.

**கன்னி** மனச் சஞ்சலம், தாய்வழி உறவு, தொழில் சிந்தை, முயற்சி தாமதம்.

**துலாம்** புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, தொழில் வருமானம், நல்ல செய்தி.

**விருச்சிகம்** அதிக வார்த்தை, கோபப்படுதல், காரிய தாமதம், பணவிரயம்.

**தனுசு** புதிய தகவல், தெய்வசிந்தை, காரிய அனுகூலம், போசன சுகம்.

**மகரம்** காரிய அலைச்சல், உறவினர் வெறுப்பு, தனவிரயம், உடல் நலக் குறைவு.

**கும்பம்** தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி, தொழில் வருமானம், குடும்ப மகிழ்ச்சி

**மீனம்** கடின முயற்சி, நண்பர்கள் உதவி, தூரதேசச் செய்தி, தனவருவாய்

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

– வளவன்

# ஷெல்காஸின் விலை மீண்டும் அதிகரிக்கும்?

(கொழும்பு)

ஷெல்காஸின் விலையை விரைவில் அதிகரிக்கவுள்ளதாக ஷெல்காஸ் லங்கா லிமிட்டட் நிறுவனத்தின் விளம்பர மற்றும் ஊடகப் பிரிவின் முகாமையாளர் ரேணுகா ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் ஷெல்காஸ் நிறுவனம் 12.5 கி.கி சிலிண்டர் ஒன்றின் விலையை 28.50 ஆல் அதிகரிப்பதற்கு நுகர்வோர் அதிகாரசபையிடம் விண்ணப்பித்திருந்தது. எனினும் நுகர்வோர் அதிகாரசபை மேற்படி கோரிக்கையை நிராகரித்திருந்தது.

உலக சந்தையில் இம்மாதம் எரிவாயுவின் விலை மெட்ரிக் தொன் ஒன்றிக்கு 70 அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளது. இதன்படி தற்போதைய விலை 670 அமெரிக்க டொலராகும்.

இதனால் எமது கோரிக்கை நிராகரிக்கபட்ட போதும் காஸின் விலையை அதிகரிக்கத் தொடர்ந்தும் நாம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றோம்.

விலையை அதிகரிக்க அரசு இணக்கப்பாட்டுக்கு வரும சாத்தியம் காணப்படுவதால் வெகுவிரைவில் காஸ் விலை அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-9)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்க்கான

# நிதி ஒதுக்கீட்டை இரத்துச் செய்தால் பாரிய பின் விளைவுகள் ஏற்படும்

## அரசுக்கு சுரேஸ் எம்.பி.எச்சரிக்கை

(கல்வியங்காடு)

பொதுநல நோக்கோடு நல்ல சூழலைக் கொண்டதான இடத்தைக் கோப்பாய் வாழ் மக்கள் எவராவது வழங்கினால் அங்கு நவீனவசதிகள் கொண்ட நூல் நிலையததை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கத் திட்டமிட்டிருக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கோப்பாய் பிரதேசத்தில் மாணவர்கள் தங்கள் அறிவை வளர்ப்பதற்கு நூல் நிலையம் அவசியமாகவுள்ளது.

ஆகவே, அதற்கேற்ற காணியைப் பொதுநலப் பற்றுக் கொண்ட எவராவது வழங்கினால் அங்கு நூல் நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு ஏற்ற சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளமுடியும்.

தமிழத் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளை அரசாங்கம் நிராகரித்தமை, திட்டமிட்டுச் செய்யப்பட்ட சதியாக நான் கருதுகிறேன். அதனை நாங்கள் மீளவும் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்போம்.

அவ்வாறு பெறுவதையும் தடுப்பார்களானால் அரசாங்கத்திற்குப பல தீயவிளைவுகள் ஏற்படும். சமூக அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டுதான் இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆனால், இது நிராகரிக்கப் பட்டமை தொடர்பாக எமக்கு அறிவிக்கப்பட்டவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ப-74)

## ஊர்வலமும் நூல் வெளியீட்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

தவயோகி யோகசுவாமிகளினதும், தவத்திருவடிவேற் சுவாமிகளினதும் திருவுருவப் படங்களின் ஊர்வலமும் "யோக சுவாமிகளும், கிளிநொச்சியும்" என்ற நூல் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

மு.ப.9.00 மணிக்கு கிளிநொச்சி கந்தசாமி கோவிலில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் கிளிநொச்சியில் உள்ள பண்பாட்டு மண்டபத்தையடையும்.

தொடர்ந்து அங்கு மு.ப.10.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் நூல் வெளியீட்டு விழா ஆரம்பமாகும்.

இதில் ஆசியுரைகளை தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள், ஸ்ரீமத் ஆத்மகணானந்த மகராஜ் சுவாமிகள், சிற்ருபானந்த சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ திருஞானசம் பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இரத்தினேஸ்வரக் குருக்கள் ஆகியோர் வழங்குவார்கள்.

நூல் அறிமுகவுரையை, மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசும் நூல் ஆய்வுரையை, சிவத் தமிழ்வித்தகர் சிவமகாலிங்கமும், வெளியீட்டு உரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் அ.சண்முகதாஸும் நிகழ்த்தவுள்ளனர். (க)

## சமாதானம், போர் என்ற வகையில்

# இருவேறு முகங்களை காண்பித்து தப்பித்துக் கொள்கிறார் ஜனாதிபதி

## புதிய ஜனநாயகக் கட்சிப் பொதுச் செயலாளர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி சந்திரிகா சமாதானத்திற்கு ஒரு முகத்தையும் யுத்த முனைப்புக்கோரி நிற்கும் பேரினவாத சக்திகளுக்கு மற்றொரு முகத்தையும் காட்டிப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முடியாது காலத்தை இழுத்தடித்துச் செல்லும் தந்திரோபாயத்தைக் கையாண்டு வருகின்றார்.

அதேவேளை, இந்திய, அமெரிக்க வல்லரசு ஆதிக்க சக்திகளின் முழு ஆதரவுடன் விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்காது விடும் பேரினவாத சக்திகளின் யுத்த முனைப்புகளுக்கு தனது உண்மையான முகத்தைக்காட்டிநிற்கின்றார்.

இதனால் இரண்டரை வருடங்களைக் கடந்து நிற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் அதன் கீழான யுத்த நிறுத்தமும் அபாயமானதோர் கட்டத்தை அடைந்து மீண்டும் யுத்தம் வெடித்து விடுமோ என மக்கள் அஞ்சவேண்டிய நிலையிலேயே இருந்து வருகின்றன.

இது இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் சி.நவரத்தினத்தின் முதல் மாத அஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செத்திவேல் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ஐ.ம.சு.முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து ஆறு மாதங்களாகியும் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் சிறு அடிதானும் முன்னேறவில்லை என்றும் யுத்தமும் இல்லை சமாதானமும் இல்லை என்ற தோரணையிலும் பேச்சுவார்த்தையும் வேண்டாம் அரசியல் தீர்வும் அவசியம் மற்றது என்ற பேரினவாத உள்நோக்க அடிப்படையிலேயே நிலைமைகளை இழுத்தடித்துச் செல்வதையே விரும்புகின்றனர்என்றும் அவரது முழு இலக் கும் தொடர்ந்து அதிகாரக் கடிவாளத்தைக் கைகளில் வைத்திருப்பதையே நோக்காகக் கொண்டதாகும் என்றும், பேச்சுவார்த்தையைத் தொடக்குமாறு வற்புறுத்தி நிற்கும் ஐக்கிய தேசியக் கட்சியினர் கூட அடுத்துவர இருக்கும் ஜனாதிபதித் தேர்தலைமையாக வைத்தே தமது காய்களை நகர்த்தி வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

ஒருபுறம் மோசமடைந்துள்ள பொருளாதார நெருக்கடியும் வாழ்க்கைச் செலவும் சாதாரண மக்கள் எட்டிப் பிடிக்க முடியாதவாறு உயர்ந்து செல்கிறது.

சம்பள உயர்வு என்பது வெறும் கண்துடைப்பாகவே அமையப் போகிறது. இன்றைய பொருளாதார நெருக்கடியும் விலை உயர்வு, கட்டண அதிகரிப்பு தற்செயலானவை அல்ல கடந்த கால் நூற்றாண்டு கால தாராள மயம், தனியார் மயம் உலகமயமாதல் என்பனவற்றின் பாரிய பின்விளைவுகளாகும்.

அன்று ஜே.ஆர். தொடக்கி வைத்த தவறான பொருளாதாரக் கொள்கையைத் தான் சந்திரிகா அம்மையாரும் தொடர்ந்தார். இடையில் தம்மை மூன்றாவது சக்தி, எனக் கூறிக்கொண்டு அரசியல் அரங்கிற்கு வந்த ஜே.வி.பி.யும் இன்றைய அரசில் பங்காளியாகி தாராளமயம் தனியார் மயம் உலக மயமாதலுக்குப் பணிந்து மக்களுக்குப் பதில் கூற முடியாது திண்டாடுகின்றது.

அதன் காரணமாகவே பேரினவாதக் கூச்சலைக் கிளப்பி அதன் மறைவில் தமது அரசியலை நடத்தி வருகின்றன என அவர் தொடர்ந்து கூறினார். (க)

## யாழ்.குடாநாட்டில்

# சட்டவிரோத மின் பாவனையால் மரணிப்போர் தொகை அதிகரிக்கிறது

(திருநெல்வேலி)

யாழ்.குடாநாட்டில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவோரின் தொகை அதிகரித்து வருகிறது.

அண்மையில் பிறந்த நாள் வைபவத்திற்கு சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று அதை துண்டிக்க முற்பட்டபோது மின் தாக்கி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இவ்வாறு குடாநாட்டில் சட்டவிரோதமான மின்சாரத்தால் இடம்பெறும் மரணங்கள் அதிகரித்து வருகிறது.

இது குறித்து மின்சார சபையினர் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவோரை சட்டத்தின் முன் நிறுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளது. சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவோர் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்போரிற்கு கையூட்டு வழங்கி தம்பிக் கொள்வதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, மின்சார சபையினர் வடமராட்சி-பருத்தித்துறையில் இருந்து மணியகாரன் சந்தி வரை வீதி மின்விளக்கை பொருந்தாமல் அசண்டையீனமாக இருப்பதாக இப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். (ப-43)

# தேர்தல் முறையை மாற்றுவதாயின் ஆட்சி முறையிலும் மாற்றம் வேண்டும்

## அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த

(கொழும்பு)

தற்போதுள்ள தேர்தல் முறை மாற்றப்படவேண்டுமாயின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையிலும் மாற்றம் கொண்டுவரப்படுவது அவசியமாகும் என சக்தி மற்றும் வலுத்துறை அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள தேர்தல் முறை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்குகிறது.

அத்துடன், தேர்தலில் தனியொரு அரசியல் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெறமுடியாத நிலையிலும் இருக்கிறது என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பவ்ரல் அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

விகிதாசார பிரதிநிதித்துவ முறைக்கு முன்னர் இருந்த தேர்தல் முறை இருக்குமானால் தனியொரு கட்சி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறச் சந்தர்ப்பம் உண்டு.

அவ்வாறானதொரு முறை நிறைவேற்று அதிகாரத்தையும் மட்டுப்படுத்துகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (த-04)

## புங்குடுதீவில் வதிவிடப் பாஸ் நடைமுறையை

# உடனடியாக நீக்கக்கோரி ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

(திருநேல்வேலி)

யாழ்ப்பாணம் புங்குடுதீவுப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள பொதுமக்களிற்கு கடற்படையினரால் விதிக்கப்பட்டுள்ள வதிவிடப்பாஸ் நடைமுறைகள் நீக்கப்படவேண்டும் எனக்கோரி புங்குடுதீவுப் பிரதேச பொது அமைப்புகளின் ஒன்றியம் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இக் கடிதத்தில் புங்குடுதீவுப் பகுதிகளில் மீளக்குடியேறி வாழ்ந்து வரும் பொதுமக்களிடம் கடற்படையினர் வதிவிடப் பாஸ் பெறவேண்டும் என வற்புறுத்தி வருகின்றனர்.

இது புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின் நம்பிக்கையுடன் மீளக் குடியமர்ந்த மக்களிடையே மேலும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

இவ்வாறு வதிவிடப் பாஸ் பெறாதவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனவும் கடற்படையினர் எச்சரிக்கை செய்து வருகின்றனர். இதைவிட உறவினர் வீடுகளிற்கு வருவோரிற்கும் இப் பகுதியில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணாக எமது மக்களின் இயல்பு வாழ்வை பாதிப்பவையாக உள்ளன.

எனவே, கட்டுப்பாடுகளையும் தடைகளையும் நக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ப-43)

# ஐ.ம.சு. முன்னணியின் வரவு - செலவுத்திட்டம் அரச ஊழியர்களை உற்சாகப்படுத்துமாம்

## நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களை உற்சாகப்படுத்தும் செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்படும் என நிதியமைச்சர் கலாநிதி சரத்அமுனுகம தெரிவித்தார்.

குறைவான விடுமுறைகளைப் பெறும் ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளை வழங்கும் முறை ஒன்றும் சகல அரச ஊழியர்களுக்கும் பிரதிநிதித்துவப் பயிற்சி வழங்கும் திட்டமும் அறிமுகப்படுத்தப்படும் எனவும் சம்பள அதிகரிப்புக்கு மேலதிகமாக இந்த வரப்பிரசாதம் கிடைக்கும் எனவும் சரத்அமுனுகம குறிப்பிட்டார்.

அபிவிருத்தி தொடர்பாக அரசாங்க ஊழியர்களிற்குத் தெளிவுபடுத்துவதற்காக கண்டியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போதே நிதியமைச்சர் இதனைக் கூறினார்.

2005 ஆம் ஆண்டு சவாலான வருடம் என்றும் கூறிய அவர், அடுத்த வருடம் அரசாங்க ஊழியர்களுக்குக் கூடுதலான வரப்பிரசாதங்கள் கிடைப்பதோடு அவர்களும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அரச சேவையை முழுமையாக சீரமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் நிதியமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (க-9)

# சட்டவிரோத மண் ஏற்றிய வாகனம் அரசுடமையாக்கப்பட்டுள்ளது

(துன்னாலை)

சட்டவிரோத மண் அகழ்வில் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஹன்ரர் வாகனம் ஒன்று பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி முள்ளிப்பகுதியில் சட்டவிரோதமாக மண் ஏற்றிக்கொண்டு வந்தபோது நெல்லியடிப் பொலிஸாரால் பிடிக்கப்பட்ட வாகனமே இவ்வாறு அரசுடமையாக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் இவ் வாகனத்தின் சாரதிக்கு 4 மாத சிறைத் தண்டனை விதித்ததுடன், வாகனத்தில் கொண்டு வரப்பட்ட மண்ணையும் பறிமுதல் செய்ய உத்தரவிட்டார்.

பின்னர் குறித்த வாகனத்தின் உரிமையாளர் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் தீர்ப்பை இரத்துச் செய்யுமாறுகோரி விண்ணப்பித்திருந்தார் எனினும் மேல்நீதிமன்றமும் குறித்த தீர்ப்பையே மீண்டும் வழங்கியுள்ளது.(ப-101,9)

## வடகக-கழககில் 2005ஆம் ஆணடு தொடக்கம்

## ஈரல் அழற்சி தடுப்புமருந்து ஏற்றுவதற்கு

# சுகாதார போஷாக்கு அமைச்சு நடவடிக்கை

(சுதுமலை)

2005 ஜனவரி முதலாம திகதி தொடக்கம் வடககுகிழக்கு மாகாணத்தில் ஈரல அழற்சி -"B" எனும் புதியவகை தடுபபுமருந்து ஏற்றப்படவுள்ளதாக சுகாதார போஷாககு அமைச்சின் தொற்றுநோயியல் பரிவு சகல மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்களுக்கும், சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளது.

இதுதொடர்பான விரிவான கலந்துரையாடல் ஒன்று அணமையில் யாழ.பரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறறது. இதில சகல சுகாதார வைத்திய மறறும மாவட்ட கிராமிய, மத்திய மருநதகஙகளின் வைத்திய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயத் தடுப்புப்பிரிவு வைத்திய அதிகாரிகள் கலந்து கொண்ட இக்கலந்துரையாடலில் ஈரல் அழற்றி - "B" மருந்தேற்றலின் முக்கியத்துவம் தொடர்பாகவும் இதனை எவ்விதம் வழங்குவது என்பது தொடர்பாகவும் கருத்துரைகளை வழங்கினார்கள்.

ஈரல் அழற்சி "B" தொற்றானது உலகம் முழுவதும் பெரியதொரு பொதுச் சுகாதாரப் பிரச்சினையாகவுள்ளதாகவும் இதன்காரணமாக இது சடுதியாக ஏற்படுதல், அல்லது பின்விளைவுகளில் இருந்து, ஈரல் அரிப்பு, ஈரல் புற்று நோயு, மரணம் போன்றன ஏற்பட்டு வருவது கண்டறியப்பட்டதால் இத்தடுப்பூசி வழங்கும் திட்டம் அறிமுகப்படுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இத்திட்டம் 2003ஆம் ஆண்டு மேல, தென்,வட மேல் மாகாணங்களிலும்,2004ஆம ஆண்டு வடமத்திய சப்பிரகமுவ, மத்திய மாகாணஙகளிலும வெற்றிகரமாக அமுல்டுததப்பட்டுள்ளதாகவும், 2005ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் வடக்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களில் இத் தடுப்பு மருந்து வழங்கும் திட்டம் ஆரம்பிககப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இத்தடுப்பு மருந்து 2004ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி தொடக்கம பிறந்த பிள்ளைகளிற்கு 2ஆம் மாதமுடிவிலும், 4ஆம் மாதமுடிவிலும், 6ஆம் மாதமுடிவிலும் மூன்று தடவைகளில் வழங்கப்படவுள்ளது.

அததுடன் இவவளவுகாலமும் 2,4,6 மாதப் பிள்ளைகளிற்கு முககூட்டுவக்சின் எனும் தடை மருந்தும், வாயினூடாகப் போலியோ சொட்டுமருந்தும் வழங்கப்பட்டு வந்தது. இனிமேல் இத்தடுப்பு -மரு நதுகளுடன் ஈரல் அழற்சி B தடுப்புமருந்து (Hep-B) ஊசியாக ஏற்றப்படவுள்ளது.

அத்துடன் இத்தடுப்பு மருநதானது பிளளைகளின வலது காலிலும், டிரிபி எனும் தடை மருநது இடது காலிலும் ஏற்றப்படும். என வும் வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அததுடன் இது குழந்தைகளுக்கு வழக்கமாகக் கொடுக்கபபடும். 0.5 மில்லிலீற்றர் அளவிலே 2,4,6 ஆம் மாதமுடிவிலேயே வழங்கப்படும்.

இதற்கு வசதியாக சகல தடுப்பு மருந்து வழஙகும் சிகிச்சைநிலையங்களும ஒழுங்குபடுத்தபபடுவது தொடர்பாக வைத்திய அதிகாரிகள் கவனம் செலுத்தியுள்ளனர்.

இத்தடுப்பு மருந்து குழந்தைகளுக்கு மட்டுமே வழங்கக் கூடியவகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்தடுப்பு மருந்தேற்றல தொடர்பான விளக்கத்தினை சகல பெற்றோர்களுக்கும் வெளிக்கள சுகாதார உத்தியோகத்தர்கள் மூலம் வழங்க நடிவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் இதுதொடர்பான மேலதிக விபரங்களைத் தங்கள் பகுதி வைத்தியசாலைக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப சுகாதார மருத்துவ மாதர்களிடமும் பெற்றுக்கொள்ளமுடியும எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-252)

## பரிசளிப்பு விழா.

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகராடசிமன்ற சைவ சமய விவகாரக் குழு 2003 இல் நடாத்திய சைவசமய அறிவுப் போட்டியல் வெற்றிபெறறவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர் வரும் 20ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 10மணியளவில் யாழ்.மாநகர ஆணையாளரும், சைவசமய விவகாரக்குழுவின் தலைவருமான கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகளும், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சத்ருபானந்தாவும் வழங்குவர்.

கருத்துரைகளை சைவசமய விவகாரக்குழுவின் பிரதம பாட்சகரான ஓய்வுபெறற அதிபர் முதிரு ஞானசம்பந்தபிள்ளையும், ஆறு திருமுருகனும் வழங்குவர். (க.5)

## பரீட்சைத திகதியில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தரம்-9க்கான மாகாண மட்டப் பரீட்சையில் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவிருந்த ஆங்கிலம், சுகாதாரம் ஆகிய பாடங்கள் இம்மாதம் 30ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் 25ஆம் திகதி நடைபெறவிருந்த தரம் 7,8,10ககான சமூகக்கலவி பரீட்சையும் அடுததமாதம் 6ஆம் திகதிககுப் பிறபோடபபட்டுளளதாக யாழ. வலய உதவிக்கல்விபணிப்பாளர் தெரிவித்துள்ளார் (க-5)

## நீதித்துறையில் ஊழலா? மறுக்கிறது வழக்கறிஞர் சங்கம்

(கொழும்பு)

நீதித்துறை ஊழல்மிக்கது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்களை இலங்கை வழக்கறிஞர் சங்கத்தினர் மறுத்துள்ளார்கள்.

ஊழல் செய்யும் நீதிபதிகள் இருப்பின் அவர்கள் பற்றிய தகவல்களைப் பகிரங்கபபடுததுமாறு அச்சஙகம் ஜனாதிபதியிடம் கோரியுளளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற வழக்கறிஞர் சங்கத்தின் கூட்டத்திலேயே சங்கத்தின் தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான இக்ரம அஹமட் இதனைத தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இக்கருத்துக் குறித்து வழக்கறிஞர்களைப் போன்று நீதிபதிகளும் கவலையடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களில் நீதித்துறைக்குக் களங்கம ஏற்படும் என்பதுடன் இதனால் நீததுறை தொடர்பாக மக்கள மத்தியில் நிலவிவருகின்ற நம்பிக்கை அற்றுப்போகும் அபாயம தோன்றும் எனவும் அவர் மேலுமதெரிவித்துள்ளார். (க-4)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்தின் ஏற்பாட்டால் யாழ்.வலயத்தல மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 21ஆம், 22ஆம், 23ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர்களுக்கு யாழ்.மதத்திய கல்லூரியில் காலை 9மணி தொடக்கம் பி.ப 4.30மணிவரையும், மாணவர்களுக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப பாடசாலையில் காலை 9.30மணி தொடக்கம் பி.ப 4.30மணிவரையும் நடைபெறும்.

எனவே இக்கருத்தரங்கில் பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களையும், மாணவர்களையும் கடடாயம் கலந்து கொள்ளுமாறு யாழ். கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார் (க-5)

## மாவீரர் தினத்தை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்குமாறு மக்களிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தாயக மண்மீட்புப் போரில தமது இன்னுயிரை அர்பபணித்து எம் நெஞ்சிலும் நிறைந்துள்ள புனிதர்களை நினைவுகூரும் மாவீரர் நாள் அண்மித்துவருகிறது.

இம்மாவீரர் நாள் செயற்பாடுகளை உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்குமாறு மககளை யாழ். மாவடட தேசிய எழுசசிப்பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மாவீரர் நாள் வேலைத் திடடங்களை பொது அமைப்புக்களுடன் இணைந்து தேசிய எழுச்சிப் பேரவை முனனெடுககும்.

அத்துடன் யாழ். மாவட்ட பிரதேசங்களை சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்காரம் செய்வதுடன முககிய இடங்களில வளைவுகள் கட்டியும், நினைவுப்பந்தல்கள் அமைத்தும், மாவீரர் திருவுருவப் படங்களை வைததும் மலர் வணக்கம செலுததத் தேவையான நடவடிக்கைகளை தேசிய எழுச்சி பேரவையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மாவீரர் நாளை முன்னிட்டு இரத்ததானம், சிரமதானம், மக்கள் நலன்சார் திட்டங்கள் போன்றவை சிறப்பாக முன்னெடுக்கப்படவேணடும்.

அத்துடன் மாவீரர் பெற்றோரை சிறந்தமுறையில் கௌரவிக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதோடு ஒவ்வொரு மாவீரர் துயிலும் இல்லம் செல்வதற்கும் தேசிய எழுச்சிப பேரவையினர் விரிவான ஏறபாடுகளை மேற்கொள்ளவேண்டும் என கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மாவீரர் நாளன்று முதல் மாவீரர் சங்கர், வீரச்சாவடைந்த நேரமான மாலை 6.05மணிக்கு அனைத்து ஆலயங்களிலும், தேவாலயங்களிலும், பளளிவாசல்களிலும் மணி ஒலியெழுப்பி சுடரேற்றவும் தேசிய எழுச்சிப் பேரவையினர் ஒழுங்குகளைச் செய்யவேண்டுமெனவும், இதற்கு அனைத்துத்தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கி விடுதலை ஒளி பிரகாசிக்கச் செய்யவேண்டும் எனவும் தேசிய எழுச்சி பேரவையின் ஊடகப் பேசசாளர் ப.கனகலிங்கம் தெரிவிததுள்ளார். (க-4)

---

*(.... தொடர்ச்சி)*

**(ii)** சுரமானியில் உள்ள மூன்று இழைகளினது தடிப்புப் பற்றி யாது கூறுவீர்?

**(iii)** சுரமானியைப் பயன்படுத்தி ஈர்க்கப்பட்ட இழையின் அதிர்வைப் பாதிக்கும் மூன்று காரணிகளைச் சோதித்தறியலாம். அம்மூன்று காரணிகளும் எவை?

**(iv)** மேலே வினா **(iii)** இல் கூறிய மூன்று காரணிகள் ஒவ்வொன்றையும பரிசோதிக்கும் செய்முறைகளைச் சுருக்கமாகப் படிமுறைகளில் தனித்தனியே எழுதுக.

**(v)** சுரமானி ஆக்கபபட்ட பெட்டி பொன்னாலான பெட்டியாக இருப்பதன் நோககம் யாது?

**08**.புவியில் காணப்படும் பயன்மிகு பொருட்களில் சுண்ணாம்புக்கல்லும் ஒன்றாகும். இது பொருளாதார முக்கியத்துவம்வாய்ந்தது.

**(i)** a.நமது நாட்டில் சுண்ணாம்புக்கல் காணப்படும் இடங்கள் நான்கு எழுதுக?
b.சீமெந்து உற்பத்திக்குச் சிறந்த சுண்ணாம்புக்கல் நமது நாட்டில் எங்கேயுண்டு?

**(ii)** a.நீறிய சுண்ணாம்பின் இரசாயனப் பெயர் யாது?
b.நீறாத சுண்ணாம்பின் இரசாயனப் பெயர் யாது?

**(iii)** a.உள்நாட்டு முறையில் சுண்ணாம்பு உற்பத்தி செய்யப்படும் படிமுறைகளை எழுதுக?
b.அம்முறையில் உள்ள குறைபாடுகளை எழுதுக.
c.நீறாத சுண்ணாம்பின் பயன்கள் நான்கு எழுதுக.

**(iv)** சுண்ணாம்புக்கல்லின் வெப்பப் பிரிகைக்கான சமன்செய்த சமன்பாட்டை எழுதுக.

**(v)** a.இரத்தினக்கல்லின் சிறப்பியல்புகள் இரண்டு தருக.
b.இலங்கையில் இரத்தினக்கல் அகழ்தல் கைத்தொழிலை மேம்படுத்தத்தக்க நான்கு கருத்துக்கள் தருக.

**09**.பின்வருவனவற்றில் எவையேனும் ஐந்தை விஞ்ஞானரீதியாக விளக்குக.

**(i)** ஆழங்குறைந்த நீர்நிலைகளில் கடுஞ் சூரியஒளியுள்ள வேளைகளில் பச்சை அல்காப் படைகள் நீரின் மேற்பரப்பில் மிதக்கும்.

**(ii)** இரும்பினாலான வரவேற்பறைக் கதிரைகளின் கால்களின் அடிப்பகுதிகளுக்கு இறப்பரினாலான பூண்கள் பூட்டப்பட்டிருக்கும்.

**(iii)** மதியவேளைகளில் ஏற்படும் வெட்டுக்காயங்களிலிருந்து குருதி அதிகளில் வெளியேறும்.

**(iv)** தாகமடைந்த வேளைகளில் தாகத்தைத் தீர்க்க மென்பானம் அருந்தினால் தாகம் மேலும் அதிகரிக்கும்.

**(v)** அலுமினிய உறையில் சுற்றப்பட்ட உணவைச் சமைப்பதற்கு மைக்குறோவேல் அடுப்பு பயன்படுத்தப்படுவதில்லை.

**(vi)** குளிரூட்டிகளின் முன்னால் இறப்பர் விரிப்புகள் விரிக்கப்பட்டிருக்கும்.

**10**.விவசாயி ஒருவர் தன்வீட்டு முற்றத்தில் கொடித்தோடை நடவிரும்பினார். அவருடைய நண்பர் ஒன்றுக்கு மேற்பட்ட கொடித்தோடைகளை நாட்டும்படியும் அவற்றை நன்றாகக் காய்க்கும் மாமரத்தின் அருகே நட்டு அதன மேல் படரவிடும்படியும் ஆலோசனை கூறினார்.

**(i)** ஒன்றுக்கு மேற்பட்ட கொடித்தோடைகளை நாட்டுமாறு கூறப்பட்டதன் காரணம் யாது?

**(ii)** நன்றாகப் பூக்கும் மாமரத்தில் கொடித்தோடைகள் எல்லாவற்றையும் படரவிடுமாறு கூறப்பட்டது ஏன்?

**(iii)** விவசாயி கொடித்தோடையில் செயற்கை மகரந்தச்சேர்க்கை செய்ய விரும்பின் அவர் எடுக்கும் நடவடிக்கைகளைப் படிமுறையாகத் தருக.

**(iv)** அதிகளவு கொடித்தோடைப் பழங்கள் கிடைக்கும் காலங்களில் அவற்றை வீணாக்காது பாதுகாக்கும் முறையொன்றைக் குறிப்பிடுக.

**(v)** புளிப்பான தோடம்பழங்களைத் தந்துகொண்டிருந்த தோடைக்கு பொசுபரசு தெளிக்கப்பட்டபின் உருவாகிய கனிகள் இனிப்பாக இருந்ததன் காரணத்தை விளக்குக.

# மீள்பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

அத்தியாயம்-4
தொடர் -v

மு. திருச்செல்வம்

"அரசியலமைப்பு யாக்க அவையானது புதிய அரசியலமைப்பைத் தயாரித்து ஏற்று நடைமுறைப்படுத்த...."

ஆற்றலுரிமை கோரியிருந்தார்கள். தயாரிக்கவும், ஏற்கவும், நடைமுறைப்படுத்தவும் ஆற்றலுரிமை கேட்டார்களேயொழியத் தயாரித்து ஏற்றுச் சட்டமாக்கி நடைமுறைப்படுத்த ஆற்றலுரிமை கோரவில்லை. சட்டமாக்கி என்ற சொல்விடுபட்டமை முக்கியமானது. ஏனெனில் சட்டமாக்கும் உரிமை இவர்களுக்கு இல்லை.

சூடானிலும் றொடீஷியாவிலும் நடந்தது போல்இங்கும் சட்டப் புரட்சி மூலம் "இத்தால் யாவரும் அறிக" என்ற வகையான பட்டயம் மூலம் புதிய அரசியலமைப்பு எழுந்தது.

இந்த அரசியலமைப்பு இலங்கை மண்ணில் எழுந்தது. மண் வாசனை உடையது. வேற்று நாட்டவரால் வேற்று அதிகாரத்தில் திணிக்கப்பட்டதல்ல. இஃது இத்தீவின் மண்ணுக்குரிய (Autochthonous) அரசியலமைப்பு.

சட்டப்புரட்சி மூலம் பழைய தொடர்புகளை அறுத்து இந்த மண்ணுக்குரியதான அரசியலமைப்பை ஏற்றுக் கொள்வது ஒன்று. அதற்கமையப் பணிந்து நடப்பது பிறிதொன்று. ஜியோபிரி மார்ஷல் (1971) என்பார் இந்த நிலையைத் தெளிவாக விளக்கியுள்ளார். ஏற்றுக் கொள்ளாதவர்கள் கூடப் பணிந்து நடப்பது பற்றிக் கூறியுள்ளார்.

இருவேறு இனங்கள் வாழும் நாட்டில் ஓர் இனத்தால் அந்த மண்ணுக்குரிதாக எழுதப்பட்ட சட்டப் புரட்சி மூலம் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பை மற்ற இனம் ஏற்றுக் கொள்ளாவிடில் அதுவும் இருவேறு இன மக்களுக்காகவும் என எழுதப்பட்ட அரசியலமைப்பு ஓர்இனத்தால் ஏற்றுக் கொள்ளப்படாவிடில் புதுமையான நிகழ்ச்சி எழுகின்றது.

அத்தியாயம்-5
தொடர்

## ஈழத்தமிழர் இறைமை

### மன்னரிடம் இறைமை

"வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை" - கட்டியக்காரன் கட்டியம் கூறமுன் மன்னவனை வாழ்த்தினான். "பல்லாண்டு வாழ்க நின் கொற்றம் ஈங்கு" மன்னவனுக்கு ஆலோசனை வழங்கும் அமைச்சன் வில்லவன் கோதை கூறியவை இவ்வாழ்த்து சேர இளவல் இளங்கோ எழுதிய சிலப்பதிகார வரிகள் இவை மன்னன் சேரன் செங்குட்டுவனை வாழ்த்தும் வரிகள். இவை மன்னனை வாழ்த்தினால் மக்கள் வாழ்வர். மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் நாட்டையோ மக்களையோ வாழ்த்துவதாயின் மன்னனை வாழ்த்தினர். நாடு மன்னனின் உடைமை. மக்கள் மன்னனின் குடிமை. நாட்டின் இறைமை மன்னனிடம் இருந்தது. மன்னராட்சியின் மாட்சியே இதுதான்.

இது தமிழரின் வழமை மட்டுமல்ல, உலகின் வழமையும் கூட. அரியணை முடி வீரவாள் செங்கோல் இவை அரச சின்னங்கள். இவற்றைக் கொண்டிருப்பவன் அரசன்.

ஓர் அரசன் இறந்தபின் அடுத்து எவர் இந்தச் சின்னங்களைத் தமதுடைமையாக்குகின்றாரோ அவரே அந்தச் சின்னங்களின் உரிமையாளர், பாதுகாவலர். அதன் மூலம் நாட்டின் பாதுகாவலர், மக்களின் பாதுகாவலர் நாட்டின் இறைமை, ஆட்சியுரிமை என்பன அவருடைத்து.

தெய்வீக சக்தியைப் பெற்றுத் தெய்வத்தின் ஆணைபெற்று தெய்வத்தின் வழி வந்தவர்களாகக் கருதப்பட்ட மன்னவர்களிடம் இறைமை இருந்தது. இந்த இறைமை சட்டத்துக்குக் கட்டுப்படாதது. மன்னர் இயற்றும் சட்டங்கள் மன்னனைக் கட்டுப்படுத்தாதலால் மன்னர் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராதலால் உயர்ந்த அதிகாரம் உடையவராதலால் இறைமை மன்னரிடம் இருந்தது.

மன்னர்கட்கிடையே எழும் போரில் அரச சின்னங்களை வெற்றிகொள்பவர் ஆட்சியை இறைமையைக் கொள்பவராகின்றார். கி.பி பத்தாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னரின் அரியணை, அரசமுடி என்பன சிங்கள மன்னனிடம் அடைக்கலமாகக் கொடுக்கப்பட்டது. பாண்டிய நாட்டை வென்ற சோழ மன்னர் அரியணையையும் முடியையும் பெறுவதற்காகச் சிங்கள மன்னன் மீது படையெடுத்தனர். பதினோராம் நூற்றாண்டில் பாண்டிய மன்னரின் அரியணை, முடி என்பன சிங்கள மன்னன் மகிந்தனிடம் இருந்து கைப்பற்றப்பட்டதுடன் சிங்கள மன்னின் முடியும் அரியணையும் கைப்பற்றப்பட்டது. இதன் மூலம் பாண்டியரின் இறைமையும் சிங்களவரின் இறைமையும் சோழரிடம் சென்றடைந்தது.

1619 இல் சங்கிலி மன்னனைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் மன்னனின் அரியணையையும் முடியையும் ஏனைய அரச் சின்னங்களையும் தமதாக்கினர். 1815 இல் கண்டி அரசைக் கைப்பற்றிய பிரிட்டிஷாரும் அரச சின்னங்களைத் தம்முடன் கொண்டுசென்றனர். இந்த இரு மன்னர்களின் அரச சின்னங்களைப் பெற்றதன் மூலம் தமிழ் ஈழ இறைமை போர்த்துக்கேயரிடமும் கண்டிய அரசின் இறைமை ஆங்கிலேயரிடமும் முறையே சென்றடைந்தது.

### மக்களிடம் இறைமை

நூற்றாண்டுகள் பலவாக மனித இனத்தின் பெரும்பான்மையினர் மன்னராட்சி முறையில் ஆட்சி செய்யப்பட்டனர். தனி ஒருவரிடம் அதிகாரம் குவிந்திருந்தமை அதிகாரப் பயன்பாட்டைஅறியா அரசர் அரசியல் பிழைத்தமை மக்களின் ஆளுமை வளர்ச்சி ஆட்சியில் மக்களும் பங்கு கொள்ளவிளைந்தமை பகுத்தறிவு ரீதியான சிந்தனை வளர்ச்சி என்பன மன்னராட்சியின் அடித்தளங்களை ஆட்டங்காண வைத்தன.

கடந்த நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டுகளில் மனிதன் முன்னெப்பொழுதும் அடையா முன்னேற்றத்தை அடைந்துள்ளான். அரசியல், ஆட்சியியல் ஆகிய துறைகளிலும் இவ் வளர்ச்சி அளப்பரியது. நூற்றாண்டுகள் பலவற்றிற்கூடாக மனித நாகரிக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த மன்னராட்சி முறை முழுமையாக மாற்றப்படக் கடந்த சில நூற்றாண்டுகளில் மனிதன் மேற்கொண்ட முயற்சிகள் அளப்பரியது. அறிவியல் வளர்ச்சி, பொருளியல் வளர்ச்சி , வாழ்வியல் வளர்ச்சி என்பன வேகமாக நடைபெற அதற்கு ஈடுகொடுக்கக் கூடிய அரசியல் வளர்ச்சியும் அவசயமாயிற்று: மன்னராட்சியில் அரசும் ஆட்சியும் மக்களுக்கு மேலானதாக இருந்தன. அரசியற் சிந்தனை யாளர்கள் மக்களுக்கும் அரசுக்கும் ஆட்சிக்கும் இடையே இடைவெளிகள் ஏற்றத் தாழ்வுகள் இருக்கக் கூடாது எனக் கருதினர். மக்களே தமக்குரிய அரசை ஆட்சியைக் கட்டுப்படுத்தும் உரித்து உடையவார்கள் என்ற கருத்தைப் பரப்பினர்.

1649இல் பிரிட்டிஷ் மன்னர் முதலாவது சார்ள்ஸ் கொல்லப்பட்டார். இப்புரட்சியில் பிரிட்டிஷ் மக்களின் அதிகாரம் மூலதாரமான அதிகாரம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றமே நாட்டின் அதிஉயர் அதிகார மன்றம் என ஏற்றுக் கொள்ளப்பட்டது. மக்களின் ஒற்றுமையின் சின்னமாக மட்டும் மன்னர் கருதப்பட்டார். வரி கொடுக்கும் மக்களே அந்தப் பணம் எவ்வாறு செலவிடப்படுகின்றது என்பதைத் தீமானிக்கும் உரிமை உடையவர்கள். இதன் அடிப்படையில் 1776 இல் எழுந்த அமெரிக்க விடுதலைப் பட்டயத்தில்,

"...மனிதனுக்காக அமைக்கப்படும் அரசு ஆட்சிசெய்யப்படுபவர்களின் இசைவுடன் தான் அதிகாரத்தைப் பெறுகின்றது" எனத் தெளிவாக எழுதப்பட்டது. மக்கள் நேரடியாக இசைவு கொடுத்தும் பங்கு கொண்டும் தெரிவு செய்யப்படும் ஆட்சி அரசு அமெரிக்காவில் அமைக்கப்பட்டது. இறைமை அமெரிக்க மக்களுடையதாக அமைந்தது. 1789 இல் பிரஞ்சு மக்கள் இதே உரிமைக் கோரிக்கையின் அடிப்படையில் "மனிதனினதும் குடிமக்களினதும் உரிமைகளின் பட்டயம்" எழுதினர்.

"மனிதன் தன்னுரிமை உடையவனாகப் பிறக்கின்றான், வாழ்கிறான்."

" மனிதனின் இயல்பான இந்த உரிமைகளைப் பேணுவதே அரசியல் சமூகத்தின் நோக்கமாகும். விடுதலை உரிமை, சொத்து உரிமை ,பாதுகாப்பு உரிமை, அடக்கு முறைக்குஎதிரான உரிமை என்பன மனிதனின் இயலபான உரிமைகளாகும் என அந்தப் பட்டயத்தில் எழுதினார்கள்.1793 புரட்சியில் பிரேஞ்சு மன்னர் பதினாறாம் லூயி கொல்லப்பட்டார். மக்கள் குடியரசு எழுந்தது. மன்னராட்சி ஒழிந்தது.நாட்டின் இறைமை மன்னரிடம் இருந்து மக்களிடம் பாரபபடுத்தப்பட்டது. மக்கள் தங்கள் பேராளர்கள் மூலம் ஆட்சி அமைக்கின்றார்கள். பேராளர்களைத் தெரிவு செய் யும் போதும் அரசியலமைப்பு யாக்க அவை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் போதும் அரசியலமைப்பு, வேறு அரசியற் சிக்கல்கள் தொடர்பான பொதுவாக்குக் கணிப்பின்போதும் மக்கள் தங்கள் இறைமையைப் பயன்படுத்துகின்றார்கள். மக்கள் தெரிவு செய்த பேராளர்கள் அமைக்கும் ஆட்சி நலமாக வளமாக அமைகின்றதா என்பதைக் கண்காணிக்கும் மக்கள் நடைமுறையில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டவும் பேராளர்களை மாற்றியும் ஆட்சியை மாற்றியும் ஆட்சியில் பங்குபற்றினர். மக்களிடம் இறைமை உண்டு என்பதற்கு இஃது அடையாளம்.

#### நாட்டினங்கள், நாடுகள்

கடந்த நான்கைந்து நூற்றாண்டுகளில் நடைபெற்ற அரசியல் பரிணாம வளர்ச்சியில் நாட்டினங்களின் எழுச்சியும் முக்கியமானது. மன்னரிடம் உள்ள இறைமை மக்களிடம் மாற்றப்பட்டபொழுது மக்கள் நாட்டினங்களாகத் தங்களைத் தொகுத்துக் கொண்டனர்.

*(தொடரும்)*

வாகன அனுமதிப் பத்திரத்திற்காக

## எழுத்துப் பரீட்சையில் தோற்றியவர்களுக்கு ஜனவரி முற்பகுதியில் செயன்முறைப் பரீட்சை

(கிளிநொச்சி)


மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தின நடமாடும் சேவையொன்று கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

வாகன அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக யாழ்.மாவட்ட அலுவலகத்தில் பதிவு செய்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்காகவே இந் நடமாடும் சேவை நடாத்தப்பட்டது.

மேற்படி வாகன அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பித்த சுமார் 550 பேர் இந்நடமாடும் சேவையின் போது நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் தோற்றுவார் கள் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் சுமார் 450 பேரே இப் பரீட் சைக்குத் தோற்றியதாக மோட்டார் போக்குவரதத்துத் திணைக்களத்தின கிளிநொச்சி மாவட்ட உதவி ஆணையாளர் எஸ். கந்தசாமி தெரிவித்தார்.

இதேவேளை, தற்போதைய கால நிலை சீரினமையை அடுத்து இவர்களுககான செயன்முறைப் பாட்சை எதிர்வரும் ஜனவரி மாத முற்பகுதியில் நடாத்தப்படவுள்ளது. (ற)





நாவற்குழி 300 வீட்டுத்திட்ட குடியிருப்புக்களில் வசிக்கின்ற மாணவர்களை வடபிராந்திய போக்குவரத்துச்சபை பேருந்துகள் ஏற்றிச் செல்லாததைக் கண்டித்து நேற்று அப்பகுதி மக்கள் கண்டி வீதியூடாக யாழ். நோக்கி வந்த சகல பேருந்துகளையும் மறத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போது பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் அங்கு சமுகமளித்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் ஞா. ஐங்கரன்)

## தமிழ்ச்செல்வன் –கூட்டமைப்பு கிளிநொச்சியில் இன்று சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனுக்கும்,தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பொன்று இன்று இடம்பெறவுள்ளது. கிளி நொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவகப் பணியகத்தில் இன்று காலை 10.00மணிக்கு இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இச்சந்திப்பில் தமிழ்ச் செல்வனோடு விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்களும் மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். கடந்த செவ்வாய்கிழமை நடைபெறவிருந்த இச்சந்திப்பு அரசியல் ஆலோசகர் பாலசிங்கத்தின் வருகை மற்றும் நோர்வேப் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்களால் பிற்போடப்பட்டது.

இன்றைய சந்திப்பில் சமாதானப் பேச்சுவார்த்தையின் தற்போதைய நிலை, அதனை மீள எவ்வாறு ஆரம்பிப்பது, இது தொடர்பில் தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் பணி என்பன தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (க-4)

## விவாத அரங்கு -7

விடயம் : தனியார் கல்வி நிறுவனங்கள்
மாணவர்களின் கல்வியை
சீரபடுத்துகின்றனவா
சீரழிக்கின்றனவா


உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.

*அனுப்பவேண்டிய முகவரி :-*

விவாத அரங்கு,
வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# அகத்தி மரத்தின் மருத்துவ குண நலன்கள்

வீட்டின் [illegible] புறங்களில் பயிரிடப்படும் மரங்களில் அகத்தியும் ஒன்று. நாட்டு மருத்துவத்தில் இது மருந்தாகப் பயன்



படுத்தப்படுகின்றது.

இது சமஸ்கிருதத்தில் அகஸ்தயாவென்றும் ஹிந்தியில் பாஸ்னாவென்றும் வங்காள மொழியில் பாஸ்பீல் என்றும் குஜராத்தியில் அகத்தியாவென்றும் கன்னட மொழியில் அக்செசோப்பு என்றும் தெலுங்கில் அகீஸ் அல்லது அவிசி என்றும் தமிழிலும் மலையாளத்திலும் அகத்தியென்றும் மராட்டிய மொழியில் மட்கா அகஸ்தாவென்றும் கூறப்படுகிறது.

### குணநலன்கள்

மருந்துக்குதவும் இந்த அதிசய மரத்தில் ஆறு வகைகள் காணப்படுகின்றன. களிமண் பிரதேசங்களில் நன்றாகப் பயிராகின்றது. மேலும் மண் இறுக்கமின்றி, மேடு - பள்ளமாகக் காணப்படும் இடங்களிலும், இம்மரம் காணப்படுகின்றது. இது விரைவில் வளரக் கூடியதாகவும் வறட்சியை எதிர்க்கும் சக்தியுடையதாகவும் காணப்படுகின்றது. விதைகளினின்று இம் மரங்களைப் பயிர்செய்யலாம். செப்டெம்பர் மாதத்திலிருந்து, டிசம்பர் மாதம் வரை இம்மரங்கள் பூக்க ஆரம்பிக்கின்றன. இதன் காய்களைக் கோடையில் நாம் காணலாம்.

### பூக்களும் காய்களும்

இதன் இலைகளும், விதையுள்ள காய்களும் அதிலும் சிறப்பாக இதன் பூக்களும், காய்கறியைப் போன்று சமைக்கப் படுகின்றன. இவைகள் ஊட்டச்சத்து வாய்ந்தவை; உடலுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியவை; சிறுநீர் கழிப்பதை உடலில் தூண்டக்கூடியவை, மலமிளக்கியாகவும் பயன்படுத்தப்படக் கூடியவை. இதினின்றுகிடைக்கும் காய்களை சமைக்கலாம். சைனஸ் உபத்திரவம் உள்ளவர்களும், உடலில் வெற்றுக் கட்டிகளோ, கழலைகளோ வந்து துன்புறுபவர்களும் இதை மருந்தாகப் பயன்படுத்தலாம். வெள்ளைப் போக்கு நோயால் அவதியுறும் பெண்கள், புத்தம் புதிய அகத்திப் பூக்களை சேகரித்து நெய்யில் வதக்கி நாள் ஒன்றுக்கு மூன்று தடவை வீதம் உண்டால் குணமாகும். மார்புச்சளிநோய் உள்ளவர்கள், இப் பூக்களைக் கசக்கிப் பிழிந்து 2 மேசைக் கரண்டியளவு சாறெடுத்து, அதே அளவு தேனையும் சேர்த்து, தினமொன்றிற்கு மூன்றுவேளை அருந்தினால், மார்புச்சளியை வெளியே கொண்டுவந்துவிடும். இப் பூவின் சாறுதனை எடுத்துப் போட்டால், கண்நோய் குணமாகும். கண்ணில் ஏற்படும் வறட்சியை விரட்டியடிக்கும்.

### இலைகள்

அகத்தியிலைகளைப் பிழிந்து சாறெடுத்து பயன்படுத்தினால் வயிற்றுக் கோளாறுகள் நீங்கும். 30 அகத்தியிலைகளை எடுதது, நன்றாக அரைத்து, தண்ணீரில் கலந்து, பின்னர் அதை வடிகட்டி, நாள் ஒன்றிற்கு இரண்டு அல்லது மூன்று தேக்கரண்டி வீதம் அருந்திவந்தால் வயிறு குணமடையும். அதிகமாக எடுத்தீர்களானால் பேதியும் வாந்தி

## மருத்துவ விளக்கம்

யும் ஆகலாம். எனவே அகத்தியிலைச்சாறுதனை உபயோகிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த இலைகளை நன்கு அவித்து, அதன் நீரைப் பருகுதல், தோலில் ஏற்படும் பொக்குளங்களைப் போக்கவல்லது.

அகத்தி இலையில் ஏராளமாகக் கல்சியம், விட்டமின் ஏ, அயன் போன்ற ஊட்டச்சத்துப் பொருட்கள் காணப்படுகின்றன. ஒரு கைப்பிடி அகத்தியிலுள்ள கல்சியத்தைப் பெற்றுக்கொள்ள நாம் 10 டம்ளர் புதிய பாலை அருந்தவேண்டும். அல்லது 20 முட்டைகளைச் சாப்பிட்டு ஈடு செய்துகொள்ளவேண்டும்.

ஒரு கைப்பிடி அகத்தியிலையிலுள்ள காரோடீன் உருவிலே கிடைக்கப்பெறும் விட்டமின்-ஏ யானது, நமது அன்றாட தேவைக்குப் போதுமானது. செழுமையான பச்சை அகத்தியிலைகளிலே அயன்சத்தும், பொஸ்பரஸும் ஏராளமாக இருக்கின்றது.

இலைகளில் இருந்து எடுக்கப்படும் பச்சைச் சாறானது சயம், ஆஸ்துமா, நாட்பட்ட இருமல், நுரையீரலில் ஏற்படும் சீழ்க்கட்டி, கணைநோய், புரதக் குறைவினால் ஏற்படும் குவாசியக்கோர் எனப்பட்ட நோய், மாலைக்கண் போன்ற வியாதிகளால் துன்புறுபவர்களுக்குக் கொடுக்கப்பட்டால் திருப்திகரமான விளைவுகளைக் காணலாம். மேலும் டைபாயிட், குளிர் ஜுரம் போன்ற வியாதிகளால அவதிப்படுபவர்களும் இந்த மருந்தை எடுப்பது நல்லது.

இந்த அகத்தி இலைகளினின்று எடுக்கப்படும் புத்தம் புதிய சாற்றினை, தண்ணீருக்குப் பதிலாக கோதுமைமாவிலே ஊற்றிப் பிசைந்து, ரொட்டி செய்தால், கல்சியம், அயன்சத்து, விட்டமின் - ஏ போன்றவை எடுக்கப்படாததால், உடலில் ஏற்பட்டிருக்கும் குறைவுகள் அனைத்தையும் நீக்கிவிடும். இத்தகைய நன்மைகளைப் பெறுவதற்கு அகத்தி இலையை அவித்தும் சாப்பிடலாம்.

பச்சையான அகத்தி இலைகளை கசக்கிப் பிழிந்து சாறெடுத்து, சொட்டுச் சொட்டாக மூக்கினுள் விடுவோமானால், அது மூக்கின் சளிச் சவ்வுகளில் ஏற்படும் அழற்சியையும், ஜலதோஷத்தையும், சைனஸ் தொல்லையையும் மூக்கில் ஏற்படும் அரிப்பையும் போக்கக்கூடியது. இச்சொட்டுகளை மூக்கினுள் ஊற்றுவதன் மூலம், மூக்கு இழந்து போன தனது முகரும் வாசனையைத் திரும்பப் பெறலாம். மேலும் அகத்தி இலைகளை

**டாக்டர் ஆஷாகன்னா**

வாயில வைத்து சுவைக்கும்போது, வாயில் கிருமிகளால் ஏற்படும தொற்றுகளை ஒழித்துச் கட்டுகின்றது.

அகத்தியின் குணமாக்கும் சகதிகளை, நமது முன்னோர்கள அறிந்திருந்தார்கள், பயன்படுத்தினார்கள். நாமும் இத்தகைய பெருமைவாய்ந்த கீரையினை, எளிதில் மிக மலிவாகக் கிடைக்கக் கூடிய இந்தக் கீரையினை பயனபடுத்திப் பலன்பெறுவோம். ☆

## பனம் விதைகள் நடுகைத் திட்டம்

(கோண்டாவில்)

சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைச்சும், பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து பனை விதை நடுகைத்திட்டம் ஒன்றை பிரதேச செயலர் பிரிவுகளின் அனுசரணையுடன் நடத் தீர்மானித்துள்ளது.

நெடுந்தீவு, ஊர்காவற்றுரை, வேலணை, காரைநகர், யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில், சாவகச்சேரி, கரவெட்டி, வடமராட்சி வடக்குமேற்கு, வடமராட்சிகிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதனடிப்படையில் ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் 1500 விதைகள் வழங்கப்படவுள்ளது. (ப-130)

## சேமிப்பு அலகு ஆரம்பம்

(சாவகச்சேரி)

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையினரால் மாணவர்களுக்கான “சிசு உதான” சேமிப்புக் காரியாலய அலகு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் தலைமையில் கடந்த 10 ஆம் திகதி இது இடம் பெற்றுள்ளது. (ப-29)

## விசனம்

(கொடிகாமம்)

தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக மந்துவில் பகுதியில் பிரதான வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் போக்குவரத்தச் செய்வதில் பெரும் அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றனர்.

இது பற்றி பலரிடமும் எடுத்துக் கூறியும் பலன் கிடைக்கவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-123)

* * *

(அம்பன்)

அம்பன் குடத்தனைப் பகுதி பிரதான வீதிகளில் கட்டாக்காலி நாய்களால் விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

இது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ப-56)

## சமாதானப் பேச்சை மீள ஆரம்பிக்கும் வகையில் புலிகளின் திட்டம் குறித்து அரசு ஆராய்கிறதாம்

(கொழும்பு)

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையினை மீள ஆரம்பிப்பதற்கென தமிழீழ விடுதலைப் புலிகளினால் நோர்வே தரப்பினரூடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ள புதிய திட்டம் குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை சந்தித்து நோர்வே வெளிவிவகா அமைச்சர் ஜேன் பீற்றர்சன் தலைமையிலான குழுவினர் பேச்சு நடத்தியிருந்தனர்.

இந்தப் பேச்சின்போது சமாதானப் பேச்சுவார்த்தையினை மீள ஆரம்பிப்பதற்கான புதிய திட்டம் ஒன்றினை நோர்வே தரப்பினரிடம் விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர்.

அன்று மாலை கொழும்பு திரும்பிய ஜோன் பீற்றர்சன் தலைமையிலான குழுவினர் ஜனாதிபதியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் விடுதலைப் புலிகளின் புதிய திட்டம் குறித்து எடுத்துக் கூறியிருந்தனர்.

இதனையடுத்தே புலிகளின் இந்தத் திட்டம் குறித்து ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்க, அரசாங்க சமாதான செயலக பணிப்பாளர் ஜயநத தனபால உட்பட பலருடனும் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இது தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையினை மீள ஆரம்பிப்பதற்கு ஒரு பாலமாக அமையலாம் என்று அரசாங்க வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. (க)

## பிரபாவின் பிறந்த தினத்தையொட்டி யாழில் விஷேட ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஐம்பதாவது பிறந்த நாளை முன்னிட்டு யாழ்.குடாநாட்டில் 300 பேர் இரத்ததானம் செய்யவுள்ளனர்.

இந் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, தேசியத் தலைவரை வாழ்த்தி ‘கேடயம்’ ஒன்றை அவருக்கு அனுப்பிவைக்கவும் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன், வறுமைக் கோட்டின் கீழ்வாழும் 10 குடும்பங்களுக்கு சமூக நலத்திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்படவுள்ளதுடன் இதேபோன்று, பல்வேறு நலன்சார் திட்டங்களை நடைமுறைப் படுத்தவும் தேசிய எழுச்சிப் பேரவையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தேசியத் தலைவரின் ஐம்பதாவது பிறந்த நாளன்று ஒவ்வொரு பிரதேசங்களிலுமுள்ள ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. (ர-4)

## அரசாங்க ஊழியர்களிடமிருந்து வரி அறிவீட அரசு தீர்மானம்?

(கொழும்பு)

அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப் படவுள்ள 2005 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களிடம் வருமான வரி அறவிடுவதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜிதசேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அதிகூடிய சம்பளம் பெறும் அரச ஊழியர்களிடமிருந்து வரி அறவிடப்படும் என நிதியமைச்சர் கண்டியில் தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்குமுகமாகவே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் ஜே.வி.பி. இருக்கும் வரை அந்நியச் செலாவணி வருகையை அதிகரிக்கச் செய்ய முடியாதென்றும் இதனை நாட்டின் பொருளாதாரம் பின்னடைவு நோக்கிச்செல்லும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-4)

## மாவீரர் நாள் நிகழ்வுகளை எழுச்சியுடன் கொண்டாட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாள் நிகழ்வுகளை மிகவும் எழுச்சியுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கொண்டுள்ளது.

மாவீரர் நாள் அனுஷ்டிப்பது தொடர்பாக ஏற்படுத்தப்படவுள்ள திட்டங்கள் குறித்த செய்திக் குறிப்பொன்றை பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ளது. அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த உலகின் ஒப்பற்ற விடுதலைப் போராட்டத்தின் நாயகர்கள், தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருப்பவர்கள், தீரமும் தியாகமும் கொண்ட விடுதலைப்புலிகளின் வரலாற்றை எழுதி தமிழனை தலை நிமிரச் செய்தவர்கள்! மாவீரர்கள். அந்தப் புனிதர்களை தரிசிக்கும் நாளான மாவீரர் நாள் அண்மித்துவிட்டது. தமிழர்களின் திருநாளான மாவீரர் நாளை மிக உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் பல ஏற்பாடுகளை செய்து வருகிறது.

அனைத்துத் துறைசார்ந்த அமைப்புக்களும் நாங்கள் முன்னெடுததுள்ள மாவீரர் நாள் தொடர்பான வேலைத்திட்டங்களை, விரைந்து செயற்படுத்தி எமது மக்கள் மாவீரர் நாளை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

ஒவ்வொரு பிரதேசங்களிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டி நினைவுப்பந்தல்கள் அமைக்கவும் வளைவுகள், தோரணங்கள் கட்டவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. மற்றும சிரமதானப் பணிகள், மக்கள நலன்சார் திட்டங்கள், மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு போன்ற வேலைத்திட்டங்கள், சனசமூக நிலையங்கள், ஆலயபரிபாலன சபையினர், வர்த்தக சங்கங்கள் என்பன மேற்கொண்டு வருகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.(ச-04)

## வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை கட்டுப்படுத்துவது சாத்தியமற்றது

(கொழும்பு)

வரவு - செலவுத்திட்டத்தில் மக்களுக்குச் சலுகைகளை வழங்கிய போதும் அது வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த சாதகமாக அமையாது என தபால் தொலைத் தொடர்பு அமைச்சர் டி.எம்.ஜயரத்ன கூறியுள்ளார்.

கொழும்பில் கடந்த சனிக் கிழமை இடம் பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போகே அவர் இவ்வாறு கூறினார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்குப் போதுமான சலுகைகளை உலகில் எந்தவொரு அரசாங்கத்தால் வழங்க முடியும்?

தற்போதைய நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு சகலரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்று அவர் மேலும் கூறினார். (ர-8)

# ஐயங்கள் ஆயிரம்

## விலங்குகள் பேசும் மொழி

மனிதனால் விலங்குகளின் மொழியைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. ஆனால் விலங்குகள் தமக்குள் மொழிகளைப் பரிமாறிக்கொள்கின்றன. விக்கிரமாதித்தன் கதையில் வருவதுபோல பட்சிகளும், மிருகங்களும், பூச்சிகளும ஒன்றோடொன்று வசனம் பேசிக்கொள்வதில்லை.

தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகளிலுள்ள (அகராதியில்) 50ஆயிரம் சொற்களும் ஒவ்வொன்றுக்கும் மூன்று, நான்கு அர்த்தங்களும் உள்ளன. இது மனிதர்களுக்கு மட்டுமே சொந்தமானது. மிருகங்களுக்கு அதிகபட்சம் 100 வார்த்தைகள் மட்டும்தான் உள்ளன.

பறவைகளுக்கு பத்துப் பதினைந்து வார்த்தைகள் மடடும்தான் உளளன. ஒளியே எழுப்பாத பாமபு, பூசசி, புழுக்கள் வாசனை, அசைவு ஆகியவை மூலம் தகவல்களைப் பரிமாறிக்கொள்கின்றன.

நான் ரெடி, நீ ரெடியா?, பசிக்குது, பயமாக இருக்குது, அடிச்சிடுவேன், ஓடிப்போ, நான், நண்பன் என்று குறிப்பிட்ட அவசியமான தகவல்களை மட்டுமே மிருகங்கள் ஒலி மூலம் பேசிக்கொள்கின்றன. இவற்றை விலங்கியலாளர்கள் கண்டுபிடித்து வருகின்றனர்.

# சிரிக்க சிந்திக்க

வெளிநாட்டவர் இருவர் களைத்துப்போய் அந்த ஊரிலுள்ள சிறிய ஹோட்டலுக்குச் சென்று ஏதாவது குடிக்க இருக்குமா? என்று கேட்டார்கள்.

ஹோட்டல் பையனும் இரண்டு கொக்கக்கோலா போத்தலையெடுத்துத் துடைத்து அழகாக மேசையில் வைத்தான். எல்லாம் 'டிப்ஸ்'இற்காகத்தான்.

அப்போது எதிர் மேசையில் ஒரு அழகான வாலிபன் வந்து அமர்ந்தார். நேர்த்தியாக உடையணிந்திருந்த அவர் ஒரு ரீயும், ஒரு பணிஸூம் கேட்டார். அவர் பணிஸை ரீயில் நனைத்துச் சாப்பிட்டதை வெள்ளைக்காரர்கள் பார்த்துக்கொண்டு இப்படிக் கதைத்துக்கொண்டனர்,

"ஸ்ரீலங்கன் ஆர் ஓல்வேய்ஸ் வெரி வெரி நீட். ஐ ஓல்வேய்ஸ் லைக் ஸ்ரீலங்கன்"

ஏன் தெரியுமா? அவர் பணிஸை ரீயில் நனைதது்ச் சாப்பிடடதை வெளிநாட்டவர்கள் கழுவிச் சாப்பிடுவதாக நினைத்துக்கொண்டார்கள்.

அடுத்து அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அந்த ரீயை எடுத்து ஒரே வாயில் அப்படியே குடித்துவிட்டார் வாலிபர். அப்போது அந்த வெளிநாட்டவர் கூறினார்,

"ஸ்ரீலங்கன் ஓல்வேய்ஸ் ஸ்ரீலங்கன்"

### விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும்
### பகுதி I இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01.1 | 02.2 | 03.2 | 04.4 | 05.3 | 06.2 |
| 07.4 | 08.4 | 09.2 | 10.2 | 11.4 | 12.3 |
| 13.4 | 14.3 | 15.3 | 16.2 | 17.1 | 18.2 |
| 19.4 | 20.2 | 21.2 | 22.4 | 23.2 | 24.3 |
| 25.3 | 26.2 | 27.3 | 28.3 | 29.1 | 30.4 |
| 31.3 | 32.4 | 33.2 | 34.4 | 35.2 | 36.2 |
| 37.1 | 38.3 | 39.2 | 40.3 | | |

# குழந்தை மனதை



தொலைக்காட்சிக்கும் வன்முறைக்கும் நெருங்கியதொடர்பு இருப்பதாக அண்மையல் கிளவ்லேண்ட் வெஸ்டர்ன் ரிசர்வ் பல்கலைக்கழகம் தொலைக்காட்சிகள் பார்க்கும் 2000 குழந்தைகளை வைத்து ஆய்வு செய்து கண்டுபிடித்துள்ளது.

ஒருநாளைக்கு ஆறுக்கும் மேற்பட்ட மணி நேரங்கள் தொடர்ச்சியாக தொலைக்காட்சி பார்க்கும், குழந்தைகளை வன்முறை, மன அழுத்தம், கவலை, கோபம் போன்ற எதிர்வகையான உணர்ச்சிகள் ஆக்கிரமிக்கின்றன என்று அந்த ஆய்வு கூறுகிறது.

# பாதிக்கும் தொலைக்காட்சி

தினமும் அதிகபட்சம இரண்டுமணி நேரத்துக்கு மேல் உங்கள் குழந்தைகளைத் தொலைக்காட்சிப்பெட்டிக்கு முன்னால் அனுமதிக்கவேண்டாம்.

ஒருசில நாட்களில் வேண்டுமானால் மூன்று மணிநேரம் சலுகை வழங்கலாம். குழந்தைகள் விரும்பும் மலிவான பொழுதுபோக்குக் காட்டூன் போன்ற உருப்படியில்லாத செயல்களைத் தவிர்த்து, டிஸ்கவரி, நஷனல் ஜோக்ரபி போன்ற பயனுள்ள சனல்களைத் தெரிவுசெய்து பார்க்க அனுமதிக்கலாம். முக்கியமாகத் தொலைக்காட்சியைவிட குழந்தைகளின் படைப்பாற்றலை மேன்மைப்படுத்தும் வேறு செயல்களில் அதிகமாக ஈடுபடுத்துங்கள்.

# பேனா நண்பர்கள்

**T.தனஞ்சனி**
**வயது:- 18**
**கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி.**
**தொலைக்காட்சி.**

**D.G.ரோஹண பிரியங்க**
**வயது:- 22**
81ருகுணு கெத்த -
வெலிக்கந்த
பொலநறுவ.
படம், பத்திரிகை, புத்தகம்
வாசித்தல்.

**மனோச்பிரியா**
**வயது:- 15**
முத்துலிங்கம்
**51, மலர்மகள் வீதி,**
அரியாலை.
பத்திரிகை, புத்தகம
வாசித்தல், அரட்டை.

**வலம்புரி - சங்குநாதம் பேனாநண்பர் பகுதியில் தமது பெயாகளை பிரசுரிக்க விரும்புவோா தம்மைப் பற்றிய முழு விபரங்களுடன் அடையாள அட்டையின் பிரதியையும் இணைதது அனுபபுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

# இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல - 36

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



சினிமா உலகில் பிரகாசித்துவரும் இவர், இளைய வட்டங்களின் மனதில் 'பேரழகன்' ஆகத் திகழ்கிறார். இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைககவும். நீங்கள் அனுப்பி வேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 36**
**'வலம்புரி ~ சங்குநாதம'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம.**

**குறிப்பு:-**

. சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுககு குலுககல முறைமூலம் தெரிவுசெய்யபபடடு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயததில் பெற்றுக்கொள்ளவும.

**இவரைத் தெரியுமா? பரிசப் போட்டி இல:- 36**

படத்தில் உள்ளவரின் பெயர் :-.....................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-.....................

அனுப்புபவரின் முகவரி :-.....................

.....................

.....................

### இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 34
### சரியான விடை





**ஒஸாமா பின்லேடன்**

### இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 34இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | வீ. இளங்கோ<br>கோப்பாய் தெற்கு,<br>கோப்பாய். |
| இரணடாம் பரிசு | :- | ச. திலகவதி<br>பிரதான வீதி,<br>சங்கானை. |
| மூன்றாம் பரிசு | :- | தெ. நாகராணி<br>83/16, அரச வீதி,<br>யாழ்ப்பாணம். |

### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்

T.S.சயந்தன், வட்டுக்கோட்டை. த.தயாதேவி, சாவகச் S.தாஷினி, கொககுவில. த.யோகராசா, சாவகசசேரி. து.நககீரன், மல்லாகம். தௌ.யோகேந்திரன், யாழ்ப்பாணம். கு.டிலானி, கொக்குவில். வே.குமாரசுவாமி, கரவெட்டி. என்.ஜே.இரததினதயா, ஏழாலை. கே.இராஜகோபால, தொல்புரம், க.தவசலன், நல்லூர். க.கபிலன், நீர்வேலி. சு.தில்லையம்பலவாணர். புத்தூர். சு.ஜேஸ்ரராஜன், சுன்னாகம். ஆ.அனுஷா, சிததனகேணி. வி.ஜெயமதி, தெல்லிப்பளை. பா.செல்வராண, வட்டுக்கோட்டை. சி.விவேக், வியாபாரிமூலை. சி.சர்மிலன், சுழிபுரம். அ.விஜயாந்தினி, யாழ்பபாணம். சி.தவராசா, பண்டத்தரிப்பு. பே.சசிகரன், நல்லூர். L.சுவஸதிகா, உடுபபிட்டி. கே.அரசேஸ்வரன், நல்லூர். V.C.சோதிநாதன், சுன்னாகம். ப.சக்தி, மானிப்பாய. க.யாழினி, கொக்குவல. லோ.அபிராமி, வல்வெட்டி. சி.சித்தார்த்தன், தரிப்பூர். செ.பிரவன, கைதடி. H.சுகிதா, வண்ணையூர். சி.கோணேஸ்வரி, நலலூர். கோ.சஞசய், யாழ்நகர். சு.விதுஷன், கொக்குவில். N.மதன், இணுவில்.

காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோவில் அதிகாரி கொலையில் காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பக்தர்களால் மகான் என்றும் ஆண்டவனின் அவதாரம் என்றும் வர்ணிக்கப்படும் காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஐதராபாத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். தமிழக அரசின் தனி விமானத்தின் மூலம் சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் காரில் காஞ்சிபுரம் கொண்டு செல்லப்பட்டார். பின்னர் உயர் நீதிமன்றம் முன் ஆயர்ப்படுத்தப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். இதனால் இந்தியா முழுவதும் பெரிய அதிர்ச்சி அலையை உருவாக்கியது. ஜெயேந்திரர் எங்கு சென்றார். இனிமேல் என்ன செய்யப்போகிறார் என்பது புரியாத புதிராக இருந்தது.

நான்கு நாட்களுக்குப்பிறகு ஜெயேந்திரர் கர்நாடக மாநிலத்தில் காவிரி உற்பத்தியாகும் இடமான தலைக்காவிரியில் உள்ள கைலாஷ் ஆச்சிரமத்தில் இருப்பது தெரிய வந்தது. பின்னர் அவரை சமாதானப்படுத்தி மீண்டும் காஞ்சிமடத்துக்கு அழைத்து வந் தனர்.

சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் மரணம் அடைந்ததும் அதுவரை இளைய மடாதிபதியாக இருந்த ஜெயேந்திரர் காஞ்சி மடத்தின் 69 ஆவது மடாதிபதியாகப் பொறுப்பு ஏற்றார்.



காலை 4.30 மணியளவில் காஞ்சிபுரம் வந்தது.

பின்னர் அங்குள்ள எஸ்.பி. அலுவலகத்தில புதிதாகத் திறக்கப்பட்ட மகளிர் காவல் நிலையத்தில் சங்கராச்சாரியார் சிறைவைக்கப்பட்டார். அங்கு பூஜை செய்ய வேண்டும் என்று அவர் கூறினார் அதற்கு அனுமதிக்கப்பட்டது. சங்கராச் சாரியாரை காவலில் வைக்கவும் நீதிமன் றத்தில் சமர்ப்பிக்கவும் ஆவணங்கள் தயாரிப்புப் பணிகள் நடந்தன. அது முடிந்ததும் சங்கராச்சாரியாரை முதல் வகுப்பு மஜிஸ் திரேட் முன்காலை 6.12 மணிக்கு ஆஜர் படுத்தினர். மஜிஸ்திரேட் உத்தமராஜ் முன் ஆஜர்ப்படுத்தினர்.அவர் மீது கொலை, கூட்டுச்சதி சாட்சிகளைக் கலைத்தல் உட் பட 5 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது.

அவரை 15 நாள் காவலில் வைக்கும் படியும் வேலூர் சிறையில் அடைக்கும் படியும் மஜிஸ்திரேட் உத்தரவிட்டார். இது கேட்ட ஜெயேந்திரசரஸ்வதி சுவாமிகள் அரசியல்வாதியைப் போல் தனக்கு உடல் நலம சரியில்லை என்றும் மருத்துவ மனையில சிகிச்சை பெற அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதை நீதிமன்றம் நிராகரித்து சிறையில் அடைகக உத்தரவிட்டது. இதனிடையே காஞ்சி சங்கராச்சாரியை பிணையில் கொண்டு வருவதற்கான முயற்சிகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# காஞ்சிபுரத்தில் படிந்த கறை

அவரது பக்தர்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.இதற்குக்காரணம் காஞ்சிபுரத்தில் சங்கரமடம் தொடங்கப்பட்டு 2,500 ஆண்டுகளுக்குப் பிறகு அதன் சரித்திரப் புகழ் மிக்க வரலாற்றில் இந்தக் களங்கம் முதல் முறையாக

மடத்தின் முழுப் பொறுப்பையும் எடுத்துக் கொண்ட ஜெயேந்திரர், பின்னர் அரசியல் தொடர்புடைய விவகாரங்களில் மேலும தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார். குறிப் பாக அயோத்தி விவகாரத்தில் முழு மூச்சுடன் இறங்கினார்.




ஏற்பட்டுவிட்டது.

கேரள மாநிலம் காலடி என்ற கிராமத்தில் ஏழை மலையாள பிராமணப்பெற்றோருக்கு ஒரே பிள்ளையாக அவதரித்தவர் ஆதிசங் கரர். அவர் பிறந்தது சற்றேறக்குறைய கி.மு.500 என்று கூறுவது உண்டு.

தனது 10-வது வயதிலேயே சன்னியாசம் பூண்ட ஆதிசங்கரர் 32 ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழ்ந்தார்.

அந்த கால கட்டத்தில் இந்து மதத்துக்கு எதிராக 72 மதங்கள் தோன்றி இருந்தன. ஆதிசங்கரர் அந்த மதங்களை வென்று மக்கள் அனைவரையும் இந்துமதத்துக்கு திருப்பி சாதனைபடைத்தார். பின்னர் அவர் இந்துமதத்தைத் தொடர்ந்து காப்பாற்ற இந்தியாவின 4 பகுதிகளிலும் 4 மடங்களை நிறுவினார்.

இந்தியாவின் தெற்குப் பகுதியான காஞ்சிபுரத்தில் ஒரு மடமும் கிழக்கே பூரியிலும், மேற்கே துவாரகையிலும் வடக்கே பத்ரிநாத்திலும் மடங்களை நிறுவினார். இந்த 4 மடங்களிலும் மடாதிபதிகளை நியமித்தார். இவற்றில் காஞ்சிபுரத்தில் ஆதிசங்கரர் முதல் மடாதிபதியாக பதவி ஏற்றார். இதனால மற்ற 4 மடங்களையும் விட காஞ்சிபுரம் சங்கரமடம் புகழ்பெற்றதாகவும் சக்திமிக்கதாகவும் இருந்து வந்தது.

இத்தகைய காஞ்சி மடத்தின் 68ஆவது மடாதிபதியாக இருந்தவர் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள். இவர் மறையும் வரை ஜெயேந்திரர் இளைய மடாதிபதியாக இருந்துவந்தார். காஞ்சிப் பெரியவர் என அழைக்கப்பட்ட சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆன்மீகம் தவிர வேறு எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்வது இல்லை. அவரை அரசி யல்வாதிகள் பலர் தேடி வந்தபோதிலும் அவர் அரசியல் கலப்பு சிறிதும் இல்லாமல் காஞ்சி மடத்தை நடத்தி வந்தார்.

ஆனால் ஜெயேந்திரர் இதற்கு நேர்மாறாக செயல்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

கடந்த 1987 ஆம் ஆண்டு ஆகஸ்ட மாதம் 23 ஆம் திகதி காஞ்சி மடாதிபதி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளுக்கும் இளைய மடாதிபதி ஜெயேந்திரருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இதனால் ஜெயேந்திரர் திடீர் என்று கோபித்துக் கொண்டு காஞ்சிமடத்தை விட்டு இரவோடு இரவாக வெளியேறிவிட்டார். மடாதிபதி தங்களுடன எப்போதும் இணை பிரியாமல் வைத்திருக்கும் கமண்டலம மற்றும் 'தண்டம்' (நீளமானகுச்சி) ஆகியவற்றை மடத்திலேயே போட்டுவிட்டு ஜெயேந்திரர் மாயமாகி விட்டது

அயோத்தி பிரச்சினை யைத் தீர்ப்பதாகக கூறி சில சமரசத் திட்டங் களையும் அறிவித்தார். ஆனால் அவைகளால் எந்தப் பயனும் ஏற்படவில்லை.

ஆன்மீக விவுகாரங்கள் நீங்கலாக மற்ற பிரச்சினைகளில் ஜெயேந்திரர் ஈடுபடுவதற்கு காஞ்சி சங்கர மடத்திலும் மற்றும் பொது மக்கள் மத்தியிலும் கடும் அதிருப்தி கிளம்பியது.

இப்படிப்பட்ட வரலாற்று சிறப்பு மிக்க சங்கரமடம், ஜெயேந்திரர் கைது மூலம் பெரும் கொலைப் பழியை சுமந்து நிற்கிறது.

## காரணம் என்ன?

காஞ்சி சங்கராச்சாரியார் கைது செய்யப்பட்டதன் பின்னணி என்ன? என்று அனைவரும் பரபரப்புடன் கேள்வி எழுப் புகிறார்கள். ஒரு கொலை வழக்கின் பின்ன ணியாகத் தான் சங்கராச்சாரியார் கைது செய் யப்பட்டுள்ளார்.

காஞ்சிபுரத்தில் புகழ்பெற்ற வரதராஜப் பெருமாள் கோவிலில் மேலாளராக இருந்தவர் சங்கர்ராமன்(48) இவர் சங்கரமடத்தில பணிபுரிந்தார். அப்போது அங்கு நடந்து வந்த தவறுகளை சுட்டிக்காட்டினார். இது ப்ற்றி அரசுக்கும் அவர் தகவல் அனுப்பினார். மடததின் சுவாமிகள் கடல் கடந்து பயணம மேற்கொள்ளக்கூடாது என்றும் சுட்டிக் காட்டினார். இது தொடர்பாக வழக்குத் தொடர்ந்தார். இதனால் மடத்தின் சுவாமிகளுக்கும் சங்கர்ரா மனுக்குமிடையில் கருத்து வேறுபாடு கள் எழுந்தன. இதனால் சங்கரமட ஊழியர்களே சங்கர்ராமனை மிரட்டினார்கள். இந்த நிலையில் தான் சங்கர்ராமன காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோவிலில் பணியில் சேர்ந்தார்.

கடந்த செப்ரெம்பர் 3ஆம் திகதி மாலை 5.00 மணியளவில் சங்கர்ராமன் கோவில் அலுவலக அறையில் பணியில் இருந்தார். அப்போது 5 பேர் கும்பல் மோட்டார் சைக்கிளில் வந்தனர். 3பேர் கோவிலுக்குள் சென்றனர். இரண்டுபேர் மட்டும் வாயலில் நின்றனர் உள்ளே சென்ற 3 பேரும் அங்கு தனிமையில் இருந்த சங்கர் ராமனை வீச்சரிவாளால் சரமாரி வெட டினர். இதில் அவர் ரத்த வெள்ளத்தில் அதே இடத்தில் பிணமானார். பின்னர் அந்தக் கும்பல் தப்பி ஓடியது. இது தொடர்பாக விஷ்ணு காஞ்சி பொலிஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வந்தனர்.

## ஆதாரம்

அப்போது காஞ்சிபுர மாவட்ட கண்காணிப்பாளராக இருந்த பிரேம்குமார் இதை விசாரித்து வந்தார். திடீரென அவர் மாற்றப் பட்டு டேவிட்சன் என்பவர் புதிய கண் காணிப்பாளராக பதவி ஏற்றார். அவர் இதை ஒரு சவாலாக ஏற்று இந்த வழக்கில் விசாரணையை முடுக்கிவிட்டார்.

இதில் இந்தக் கொலைக்கும் சங்கர மடத்துக்கும் தொடர்பு இருப்பது தெரிய வந்தது. அதற்கான ஆதாரங்கள் திரட்டும் பணியில் ஈடுபட்டார்.

இந்தச் சூழ்நிலையில் தான் காவல் துறை பிடி இறுகியதை அறிந்த கொலை காரர்கள் 5 பேர் சென்னை 'ஜோர்ஜ் டவுன் நீதிமன்றத்தில் சரண் அடைந்தனர். அவர் களை காவலில் எடுத்து பொலிஸார் விசாரித் தனர். அவர்களிடம் ரகசிய வாக்கு மூலம் வாங்கப்பட்டது. அப்போது சங்கராச் சாரியாருக்கு இதில் தொடர்பு இருப்பது தெரிய வந்தது. அதற்கான ஆதாரங்கள் திரட்டப்பட்டன. இதற் கிடையில் இளையவர் விஜயேந்திரர் தம்பியை பொலிஸார் பிடித்து விசாரித்ததில் இக்கொலைச் சம்பவத்தின் சூத்திரதாரி ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் என்ற தகவல்கள் கிடைத்ததாகக் கூறப்படுகிறது.

## இரவில் கைது

இதறகிடையில் சங்கராச்சாரியாரின் சுற்றுப் பயண நிகழ்ச்சிகளும் கண்காணிக் கப்பட்டன. கடந்த மாதம் மதுரையில் நவாரத் திரி விழா நடத்திய ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் கேரளா சென்றார். பின்னர் கர்நாட கம் போய் விட்டு ஆந்திரா சென்றார். தீபா வளியன்று அவர் ஐதரா பாத்தில் இருப்ப தாகத் தெரிய வந்தது.

எனவே கூடுதல் டி.ஜி.பி. கே.வி. எஸ் மூர்த்தி தலைமையில் எஸ்பிக்கள் டேவிட் சன்,பிரேம் குமார், வரதராஜன், சந்தீப் நிக் கல், கூடுதல் எஸ்.பி.சக்திவேல் ஆகி யோர் ஐதராபாத் பயணமானர்கள்.

அங்கிருந்து 90 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மகபூப்நகரில் தூங்கி இருந்த சங்கராச்சாரியார் ஜெயேந்திரரை கைது செய்தனர். பின்னர் காரில் ஐதராபாத் கொண்டு வந்தனர்.

அங்கிருந்து தமிழக அரசின் தனி விமானத்தில் சென்னைக்கு கொண்டு வந் தனர். அந்த விமானம் 2.40 மணிக்கு மீனம் பாக்கம் விமானநிலையம் வந்தது. பின்னர் அவரை டாடா சுமோ காரில் ஏற்றி காஞ்சிபுரம் அழைத்துச் சென்றனர். அந்த கார் அதி



காஞ்சி சங்கராச்சாரி கைது செய்யப்பட்டதையடுத்து அவரது மடம் எதிரே பெருந்திரளாகக கூடிய மக்கள் பட்டா சுகளைக் கொளுத்தி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

சங்கராச்சாரி கைது குறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் கருணாநிதி காவல்துறை நடவடிக்கையை வரவேற்றுப் பாராட்டினார்.

இக்கொலை வழக்கில் சங்கராச் சாரியை கைது செய்யக்கோரி திமுக நடத்த இருந்த போராட்டம் ஒத்தி வைக்கப்படுவதா கவும் அவர் அறிவித்தார்.

இதனையடுத்து சங்கராச்சாரியாரின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவரது ஆதரவாளர்களும அபிமானிகளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்பட்ட சுவாமி மீதான குற்றச்சாட்டுகள் பொய்யானவை எனவும் அடித்துக் கூறுகின்றனர். எனினும் அவரின் கைது ஆதாரபூர்வமானது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தவளைப் பாய்ச்சல் 11ஆம் ஆண்டு நிறைவு

(பூநகரி)

தமிழீழ விடுதலைப் புலிகளால் பூநகரிப் பகுதியில் இருந்த படை யினரின முகாம்கள் மீது கடந்த 1993 ஆம் ஆண்டு வெற்றி கரமாக மேற்கொள்ளப்பட்ட தவளைப் பாய்ச்சல் தாக்குதல் நடவடிக்கை யின் 11ஆம் ஆண்டு நிறைவு நிகழ் வுகள் பூநகரியில் கடந்த சனிக் கிழமை மிகவும் எழுச்சியுடன் நடைபெற்றன.

நிகழ்வின் ஆரம்பத்தில் தவ ளைப் பாய்ச்சல்தாக்குதலின்போது படையினரது டாங்கி தகர்க்கப் பட்ட இடத்திலிருந்து கடற்கரும் புலி மேஜர் கணேஸ், கடற்கரும்புலி மேஜர் கோபி ஆகியோரின் திருவுருவப் படங்கள பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் பூநகரி வாடியடிச சந்திக்கு அருகில் அமைக்கப்பட்ட அரங் கத்துக்கு எடுத்துவரப்பட்டன.

மாலை 5 மணியளவில் வாடியடிச் சந்தியில் அரங்க நிகழ்வுகள் ஆரம பமாகின. இதில் பொதுச் சுடரினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒரு வரான பகலவன ஏற்றிவைத்தா.

தமிழீழத் தேசியக் கொடியினை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் ஏற்றிவைத்தா.

கடற்கரும்புலி மேஜர் கோபி யின் திருவுருவப் படததுக்கு பூநக ரிப்பிரதேச செயலர் ம.சிறிஸ்கந்த குமாரனும் கடற்கரும்புலி மேஜர் கணேஸின் திருவுருவப்படத்திற்கு கடற்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளரும் மலர் மாலைகளை அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து மாவீரர் களின் திருவுருவப் படங்களுக்கான ஈகைச் சுடரினை மன்னார் மாவட்ட மாவீரர் பணிமனைப பொறுப்பாளரும் பூநகரி வர்த்தக சங்கத் தலை வரும் ஏற்றிவைத்தனர்.

நினைவுக் கல்லிற்கான பொதுச சுடரினை கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன், பூநகரிக் காவல் பணிமனைப பொறுப்பாளர் சுந்தர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்நிகழ்வில் கடற்புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த பூரணி, பூநகரிப் பிரதேச செயலர், பூநகரிப் பங் குத்தந்தை வியூ.ஆமஸ்ரோல் ஆகியோர் உரையாற்றினர். (ற-4)

## முகாமையாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மின்சாரசபையின் பிரதிப் பொதுமுகாமையாளராக ரி. தவனேஸ்வரன் கடந்த 3ஆம திகதியன்று பொறுப்பேற்றுள்ளார்.

இவர் திருகோணமலையில் கிழக்கு மாகாண பொதுமுகாமையாளராகக் கடமையாற்றியிருந்தார்.

இதற்கு முன்னர் கடமையாற்றிய வட மாகாண மின்சாரசபையின் பொது முகாமையாளர் எஸ். கமலநாதன் இம்மாதம் இரண்டாம் திகதியுடன் ஓய்வுபெற்றுச் சென்றமையையடுத்து இவரை இலங்கை மின்சார சபை இப்பதவிக்கு அமர்த்தியுள்ளது.

(க-5)

# க.பொ.த (சாதாரண தரம்) மாதிரிப் பரீட்சை - 2004

**நேரம்: 3மணி** **விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும் பகுதி II**

ஆக்கம்: செ.அன்ரன் (அதிபர்)
மையிலிட்டி றோ.க.வித்தியாலயம்.

***கவனிக்க: முதலாம் வினா கட்டாயமானது***
***முதலாம் வினாவுககும மேலதிகமாக ஏழு வினாககளைத் தெரிந் தெடுத்து மொத்தமாக எட்டு வினாக்களுக்கு விடை எழுதுக.***


**01.** பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாக சமுத்திரங்களில் வாழ்ந்த கோடிக் கணக்கான சிறிய அங்கிகள் இறந்ததும் அவற்றின் உடல்கள் யாவும் புவியில் படைகளில் படிவடைந்து அவை உயர் அமுக்கத்துக்கும்,உயர் வெப்பத்துக்கு முட்பட்டு பல மாற்றங்களுக்குள்ளாகி தடித்த மணமுள்ள இருண்ட மண்ணிற மான திரவப்பதார்த்தமாக மாறியுள்ளன. இதுவே பண்படுத்தப்படாத எண்ணெய் ஆகும். அடையற் பாறைகளுக்கிடையில் இப்பண்படுத்தா எண்ணெய் தேங்கிக் கொள்கிறது. இதில் நூற்றுக்கணக்கான பல்வேறு சேர்வைகள் உள்ளன. பாறை களில் உள்ள துறைகளைத் தோண்டி இங்குள்ள எண்ணெய் வெளியே எடுக் கப்படும். இது கனிய நெய் எனவும் அழைக்கப்படும்.

மேற்கு ஐரோப்பா, ஆபிரிக்கா, ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, அவுஸதிரே லியா, சீனா, மத்தியகிழக்குநாடுகள் போன்ற நாடுகளில் இப்பண்படுத்தப்படா எண்ணெய் கிடைக்கின்றது.

இலங்கை வெளிநாடுகளிலிருந்து பண்படுத்தப்படாத எண்ணெயை இறக்கு மதிசெய்து சபுகஸ்கந்த கனிய நெய் சுத்திகரிப்பு ஆலையில் பகுதிபடக் காய்ச்சி வடித்தல் மூலம் பல்வேறு கூறுகளையும் வேறாக்கிக்கொள்கிறது. இதனால் வேலைவாய்ப்பு, பொருளாதாரம் என்பன மீதப்படுத்தப்படுகிறது.


(i) a.கனிய நெய் எவ்வாறு உருவாகிறது?
b.கனிய நெய் எங்கே தேங்குகிறது?
(ii) a.கனிய நெய் வளமுடைய நாடுகள் எவை?
b.இலங்கையில் கனிய நெய் சுத்திகரிப்பு நிலையம் உள்ள இடம் ஒன்று எழுதுக.
c.பெற்றோல், டீசல் என்பவற்றை இறக்குமதி செய்வதைவிட கனிய நெய்யை இறக்குமதி செய்வதால் இலங்கைக்குக் கிடைக்கும் நன்மைகள் எவை?
(iii)கனிய நெய்யைக் காய்ச்சி வடிக்கும்போது கிடைக்கும் நான்கு பொருட்களைப் பெயரிடுக.
(iv) a.கனிய நெய்யில் அடங்கியுள்ள கூறுகளின் காபன் எண்ணிக்கை அதிகரிக்கும்போது வேறுபடும் இரு இயல்புகளை எழுதுக.
b.பெற்றோலின் சூத்திரம் $C_8H_{18}$ எனக்கொண்டு அது பூரண தகனம் அடையும்போது நிகழும் தாக்கத்திற்கான சமன்படுத்தப்பட்ட சமன் பாட்டினை எழுதுக.
(v) a.கனிய நெய்க் கூறுகளின் உபவிளைவுப் பொருட்கள் நான்கு தருக.
b.உபவிளைவுப் பொருட்கள் பிரதியீட்டுப் பொருட்களாகப் பயன் படுத்தப்படக்கூடுமாயின் அவற்றில் காணக்கூடிய சிறப்பியல்புகள் எவை?

**02.** மனிதக் காதின் கட்டமைப்பு வரிப்படத்தில் தரப்பட்டுள்ளது.





(i) a.வரிப்படத்தில் **A,B,C,D** எழுத்துக்களால் காட்டப்படும் பகுதிகளைப் பெயரிடுக.
b.புறச் செவிச் சோணையின் பயன்பாடு யாது?
c.செவிச் சிற்றென்புகளைப் பெயரிடுக.
d.அவை பகுதி **A** இலிருந்து அதிர்வினைப் பெற்று **B** வரை கடத்து தலை அவற்றின் பெயர்களுடன் தொடர்புபடுத்தித் தொடராக அம் புக்குறியிட்டு எழுதுக.
(ii)பகுதி **D** ன் பயன்பாடு யாது?
(iii) a.ஒலி அலை அதிர்வுகளைக் கடத்துவதில் நத்தைச்சுருளின் பங்க ளிப்பை எழுதுக.
b.மனிதக் காதின் ஒலிக்கான உணர்ச்சி மீடிறன் வீச்சு யாது?
(iv)உட்செவி, நடுச்செவி என்பன அமைந்துள்ள குழியைச் சூழவுள்ள என்பு எது?
(v) a.வாகனத்தில் மலையுச்சியை நோக்கிச் செல்லும்போதும் மலையுச் சியிலிருந்து இறங்கும்போதும் அடைப்பு ஏற்படுவதுபோல உணரப் படக் காரணம் யாது?
b.தடிமன் தொற்றியுள்ள ஒருவருக்கு காது அடைப்பு ஏற்படக்கூடும். அதற்கு ஏதுவாக அமையக்கூடிய ஒரு காரணத்தை எழுதுக.

**03.** படத்தில் உள்ள அமைப்பு ஆவியுயிர்ப்பு வீதத்தை அளக்க அமைக் கப்பட்ட எளிய அமைப்பாகும்.





(i)இவ்வமைப்பை அமைப்பதற்கான செய் முறைகளைப் படிமுறையாக எழுதுக.
(ii)இவ்வமைப்பைத் தயார்படுத்தும்போது எதிர்நோக்கக்கூடிய சிரமங்களை எழுதுக.
(iii)ஆவியுயிர்ப்பு வீதத்தை அளவிட எடுக்க வேண்டிய இரு அளவீடுகளை எழுதுக.
(iv)ஆய்வுகூட உறிஞ்சன்மானியுடன் ஒப்பிடு கையில் இவ்வமைப்புக் கொண்டுள்ள குறை பாடு யாது?
(v) a.ஆவியுயிர்ப்பை குறைக்குக்கும் காரணிகள் எவை?
b.வறன்நிலத் தாவரங்கள் ஆவியுயிர்ப்பைக் குறைக்கக் கொண்டுள்ள இசைவாக்கங்கள் நான்கு தருக.
c.ஆவியுயிர்ப்புச் செயன்முறையால் சூழலுக்குக் கிடைக்கும் நன் மையை எழுதுக.

**04.** மூவுரிக் குதைச் செருகி ஒன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது.




(i) a.**A,B,C** எனும் எழுத்துக்களால் குறிக்கப் பட்ட கடத்திக் கம்பிகளைப் பெயரிட்டு அவற்றின் மேலுறைகளின் நிறங்களையும் தருக.
b.இக்குதைச் சுற்றினூடாகச் செல்லக்கூடிய அதியுயர் மின்னோட்டம் யாது?
(ii) a.இச்செருகி இணைக்கப்பட்ட மின்னுபகர ணங்கள் இரண்டு எழுதுக.
b.இவ்வுபகரணங்களில் மூவூசிச்செருகி இணைக்கப்படக் காரணம் யாது?
(iii)உலோக மேற்பரப்புக்களையுடைய மின்னுபகரணங்களின் கடத்திக் கம்பிகளின் உறை எதனாலானது?
(iv) a.ஈரூசிச்செருகிகளில் காணப்படும் இரு கடத்திக் கம்பிகளையும் பெயரிடுக.
b.தற்காலத்தில் வீட்டு மின்சுற்றுகளில் ஏற்படும் மின்கசிவினால் விபத்து ஏற்படுவதைத் தடுக்க இணைக்கப்படும் அமைப்பு யாது?
c.மேலே வினா (b) இல் அவ்வமைப்பின் தொழிற்பாட்டை விளக்குக.
(v)மின் விபத்துக்களை தடுக்க எடுக்கக்கூடிய முன்னெச்சரிக்கை நட வடிக்கைகள் நான்கு எழுதுக.


**05.** ஊசற் குண்டொன்றின் இயக்கத்தைப் படம் காட்டுகிறது.




(i) a.ஊசற்குண்டு பின்வரும் சந்தர்ப்பங் களில் இயங்குமபோது இடம்பெறும் சக்தி மாற்றங்களை எழுதுக.
**A ⟶ B**
**B ⟶ A**
b. சக்திக் காப்பு விதியைத் தருக.
(ii) a.ஊசற்குண்டின் திணிவு **25g.** அது புள்ளி **A**இல் இருக்கும்போது நிலைக்குத்தாகக் கீழ்நோக்கித் தாக்கும் விசையைக் கணிக்குக. (ஈர்வையினாலான ஆர்முடுகல் $10m^{-2}$)
b.அவ்விசையைப் பெயரிடுக.
c.மேலே வினா (b) இலுள்ள சந்தர்ப்பத்தில் இழையிலுள்ள இழுவை யாது?
(iii)வினா (ii) (b) இலுள்ள விசையும் வினா (ii) (c)இலுள்ள இழுவையையும் படமொன்றில் குறித்துக்காட்டுக.
(iv) a.ஊசற் குண்டு புள்ளி **B**யை அடையும்போது கொண்டிருக்கும் சக்தியைப் பெயரிடுக.
b.அதனைக் கணிக்குக.
(v)ஊசற் குண்டின் அசைவைப் பெரும்பாலும் ஒத்த சிறுவர் விளையாட்டு ஒன்றைக் குறிப்பிடுக.

**06.** கலப்புப் பிறப்பாக்கம் மூலம் புதிய அங்கிப் பேதங்களை உருவாக்கு வதுடன் பொருளாதாரரீதியில் இலாபத்தையும் சம்பாதிக்கமுடிகிறது.
(i) a.கலப்புப் பிறப்பாக்கம் என்றால் என்ன?
b.கலப்புப் பிறப்பாக்கத்தினால் விவசாயரீதியில் ஏற்படும நன்மைகள் இரண்டு தருக.
c.கலப்புப் பிறப்பாக்கத்தினால் சூழலின் உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படக்கூடிய பிரதிகூலம் யாது?
(ii) பாரம்பரியம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டவர் யார்?
(iii) a.இலிங்கமிணைந்த தலைமுறையுரிமை என்றால் என்ன?
b.மனிதரில் இலிங்கமிணைந்த தலைமுறையுரிமையாகக் கடத்தப்படும் நோய்கள் இரண்டு தருக.
c.பரம்பரையலகுப் பதியம் மூலம் முதன் முதல் உருவாக்கப்பட்ட விலங்கு எது?
(iv) கருமை நிறமான சுண்டெலி ஒன்று மண்ணிறச் சுண்டெலி ஒன்றுடன் இனங்கலக்கப்பட்டபோது தோன்றிய எச்சங்கள் யாவும் கருமை நிறமாகக் காட்சியளித்தன.
a.மண்ணிறச் சுண்டெலிகள் தோன்றாமைக்கான காரணம் யாது?
b.தோன்றிய எச்சங்களில் இரு கருமைநிறச் சுண்டெலிகளுக்கிடையில் இனக்கலப்பு நிகழ்த்தப்பட்டால் தோன்றும் எச்சங்களின் தோற்ற அமைப்பையும் அவைகளுக்கிடையேயான விகிதத்தையும் தருக.
c.மேற்படி கலப்புகளைக் காட்டும் குறியீட்டுப் படங்கள் வரைக.

**07.**




பட்த்திலுள்ளது சுரமானியாகும்.
(i) a.சுரமானியில் உள்ள துளை காணப்படுவதன் நோக்கம் யாது?
b.பாலங்கள் **A,B** என்பவற்றில் அசையக்கூடியது எது?
c.அவ்வாறு அசையத்தக்க பாலம் அமைககபபட்டதன் நோககம யாது?

(.... பக்கம் பார்க்க)

### புதிய பலஸ்தீன தலைவர் முகமது அப்பாசிற்கு எதிர்ப்பு

# அரபாத்தின் அஞ்சல் நிகழ்வில் துப்பாக்கிச் சூடு; உபேர் பலியாயினர்



மேற்குக் கரையில் காசா பகுதியில் பலஸ்தீன விடுதலை இயக்க அலுவலகத்தில் அரபாத் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பலஸ்தீன விடுதலை இயக்கத்துககுப் புதிதாக நேற்று முன்தினம் தறகாலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபா முகமது அப்பாஸ் மற்றும் வெளியுறவுத் துறை மந்திரி மற்றும் பலஸ்தீன முக்கிய பிரமுகர்கள் உட்பட ஏராள்மானவர்கள கலந்துகொண்டனர். அப்போது புதிய அதிபருககெதிராகச் சிலா் கோஷம்போட்டனர்.

திடீரென்று சிலர் துப்பாக்கியால் புதிய அதிபரை நோக்கிச் சுட்டனர். இதையடுத்து புதிய அதிபரின் பாதுகாப்பு அதிகாரிகளும் துப்பாககியால் எதிர்த்தாக்குதல் நடத்தினார்களா. சில நிமிடங்கள இந்தத் துப்பாக்கிச் சண்டை நடித்தது.

இந்தத் துப்பாக்கிச் சண்டையில் புதிய அதிபரின் பாதுகாப்பாளர்கள் 2பேர் குண்டுபாய்ந்து பலியானார்கள். இன்னும் சிலா காயம் அடைந்தனர். புதிய அதிபா முகமது அப்பாஸ் மறறும் வெளியுறவுத் துறை மந்திரி ஆகியோர் இந்தக் கொலை முயற்சியிலிருந்து தப்பிவிட்டனர்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்களும பலஸ்தீன இயக்கத்தின் ஒரு பிரிவைச சேர்ந்தவர்கள்தான் என்று தெரிய வந்துள்ளது.

இந்தநிலையில் பலஸ்தீன பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி நடக்குமென்று பிரதமர் அகமது குரே அறிவித்திருக்கிறார்.

இதேவேளை அரபாத்தின் இடத்திற்கு நியமிக்கப்பட எவரும் தகுதியற்றவர்கள் எனவும் அவரது இடத்திற்கு யாரையாவது மக்கள் அனுமதியின்றி நியமிக்க முயன்றால் எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடரும் எனப் பலஸ்தீனர்கள் அறிவித்துள்ளனர். (ப)

## பாவனைக்குப்பின் போருக்கு.

அமெரிக்காவில் போயிங் ரக பயணிகள் விமானங்கள் நீண்டநாட்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு அவை பழுதடைந்த பிறகு அவற்றைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துவது இல்லை. அவற்றை மாற்றியமைத்து கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணை செலுத்து வாகனமாகப் பயன்படுததத் திட்டமிட்டுளளனர்.

லேசர் குண்டுகளையும் ஏவுகணைகளையும் ஏந்திச் செல்லும் வகையில் மாற்றியமைத்த போயிங் விமானத்தை எட்வர்டு விமானப்படை தளத்திலிருந்து பறக்கவிட்டனர். (ப)



நேரு சிலைக்கு கவர்னர் சுர்ஜித்சிங் பர்னாலா, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன், ஜெயந்தி நடராஜன் மற்றும் தலைவர்கள் மாலை அணிவித்தபோது எடுத்த படம்.

# அரசு வழக்கறிஞர் மீது ஜெயேந்திரர் ஆதரவாளர்கள் தாக்குதல்

### உயர்நீதிமன்ற வளாகத்தில் பரபரப்பு

ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின பிணைமனு வரும் புதன்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டதையடுதது அவரது ஆதரவாளர்கள் உயர்நீதிமன்ற வளாகத்துக்குள்ளேயே அ்ரசு வழக்கறிஞரைத் தாக்கினார்கள்.

ஜெயேந்திரரின் ஆதரவாளர்கள் கொடிகளுடன் நீதிமன்றத்துக்குள் கூடியிருந்தனர். ஜெயேந்திரருக்கு நீதிபதி சிறப்புச் சலுகைகள் வழங்க மறுத்ததோடு பிணைமனு மீதான விசாரணையைத் தள்ளி வைத்ததனால் இவர்கள் ஆததிரமடைைந்தனர்.

இதனால், உயர் நீதமன்றத்துக்கெதிராகக் கோஷங்கள் எழுப்பிய ஜெயேந்திரரின் ஆதரவாளர்கள் வெளியே வந்த அரசு வழக்கறிஞரைச் சரமாரியாகத் தாக்கினர்.

இதற்கு அங்கிருந்த வழக்கறிஞர்கள கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால் மோதல ஏற்பட்டது. ஜெயேந்திரரின் ஆட்களுக்கும் வழக்கறிஞர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலில் உயர் நதிமன்ற வளாகமே சிறிது நேரம் பரபரப்படைந்தது.

காவித்துணி அணிந்து கையில கொடியுடனும் பயங்கர ஆயுதங்களுடனும் வநதிருந்த இவர்கள் திட்டமிட்டே அரச வழக்கறிஞர் மது தாக்குதல் நடத்தினர் என வழக்கறிஞர் சங்கப் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

ஜெயேந்தரருக்கு ஆதரவாக வன்முறையில் ஈடுபட்டவர்கள் விஷ்வ ஹிந்து பர் ஸத், மற்றும் ஆர்.எஸ்.எஸ்., அமைப்புக்களைச் சேர்ந்தவர்களென்று பின்னர் பொலிஸார் தெரிவித்தனா. (து)

# தென்கொரியாவில் ஆர்ப்பாட்டம்!

தென்கொரிய அரசினால் கொண்டுவரப்பட்டுள்ள தொழிலாளர் சட்டங்களில் உள்ள குறைபாடுகளை எதிர்த்துத் தலைநகா சியோலில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

தென்கொரிய அரசினால் கொண்டுவரப்பட்டுள்ள தொழிலாளர் முறைமைச் சட்ட மாற்றத்தால் லடசககணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றமையைச் சுடடிக்காட்டி அந்நாட்டுத் தொழிற்சங்கங்கள பலவும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.




எனினும் அரசாங்கம் இதுவிடயத்தில் கவனம் செலுத்தாது இருந்துவருகினறமையைக் கண்டிக்கும் விதமாக 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் தென்கொரியத் தலைநகா சியோலில் திரண்டு அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக அரச ஊழியர்களும் தம் பணிகளினை பகிஸ்கரிப்பு செய்ததுடன் தொழிலாளர்களுடன் இணைந்தும் போராட்டத்தில் குதிததனா.

பல இலட்சக் கணக்கானோர் திரணடு மேற்கொண்ட இவ்வார்ப்பாட்டத்தினால் தென்கொரிய அரசு பெரும் நெருக்கடிகளுக்குள்ளாகியிருக்கிறது. (ப)

### ஈராக் தீவிரவாதிகளை ஒடுக்கும் முயற்சியில் அமெரிக்கா

# பலூஜாவில் நேற்று மீண்டும் மோதல் ஆரம்பம் 20பேர் உயிரிழந்தனர் 46பேர் காயம்

ஈராக்கின் பலூஜா நகரில் நேற்றையதினம் மீண்டும் மோதல்கள் ஆரம்பித்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலூஜா நகரிலுள்ள தீவிரவாதிகளின பதுங்குநிலைகள் மீது இலக்கு வைத்து அமெரிக்கக் கூட்டணிப் படைகள் திடீர்த் தாக்குதல்களை ஆரம்பித்தனர். இதற்குப் பதிலடியாகத் தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்தனர்.

இதனால் அங்கு மோதல்கள் உக்கிரமடைந்துள்ளன. இத்தாக்குதல்களில் 20பேர் உயிரிழந்திருப்பதாகவும், 46பேர் படுகாயமடைந்திருப்பதாகவும் அங்கிருநது வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்மோதல்களின்போது அமெரிககக் கூட்டணிப்படைகள் பலூஜா நகரிலுள்ள தீவிரவாதிகளின் நிலைகளை முற்றுகையிட முயற்சித்ததாகவும் இதற்கு உதவியாக உலங்குவானூர்திகள், டாங்கிகள, விமானங்கள் என்பன தாக்குதலில ஈடுபட்டுள்ளபோதும் தீவிரவாதிகள் தொடர்ந்தும் பதில் தாக்குதல்களை மேற்கொண்டு வருகினறனர். இவாகளின் துல்லியமான பீரஙகித்தாக்குதல்களால அமெரிக்கப் படைகள் திணறுவதாக அமெரிக்க இராணு அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்கப் படைகளிடம் பலூஜா நகரம் முற்றாக வீழ்ந்துவிட்டதாகத் தெரிவக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்றுவருகின்றமை குறித்து சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 6 நாட்களாக பலூஜாவில் இடம்பெற்ற மோதல்களில் ஆயிரம் தீவிரவாதிகளும், 38அமெரிக்கப் படைகளும் பலியாகியதுடன் 200ற்கும் அதிகமான தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டுள்மை இங்கு குறிப்பிடத்தக்கது.(ப)



ஜேர்மனி நாட்டு ரீ.வி ஒன்றில் சவாலுக்கு தயாரா? என்ற சாகசப் பொழுதுபோக்கு நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. இதனைப் புகழ்பெற்ற ரீ.வி அறிவிப்பாளர் தாமஸ் காட்சால்க் நடத்திவருகிறார். இதன் 154 ஆவது நிகழ்ச்சி நேற்று முன்தினம் ஒளி பரப்பப்பட்டது. இதில் பிரபல ஹொலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலி கலந்து கொண்டார். அப்போது இராட்சத மலைப்பாம்புடன் நடனமாட ஏஞ்சலினா ஜோலிக்கு ரீ.வி அறிவிப்பாளர் தாமஸ் அழைப்பு விடுத்தார். அதைச் சவாலாக ஏற்றுக்கொண்ட ஏஞ்சலினா ஜோலி அந்த மலைப் பாம்பை தோளில் போட்டுக் கொண்டு ஆனந்தக் கூத்தாடினார். அதனைப் படத்தில் காணலாம்.



பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் பலஸ்தீனச் சிறுவன் ஒருவனைப் படத்தில் காணலாம்.

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன் குறள்

வலம்புரி

# வரவு – செலவுத் திட்டம் வறுமை போக்குமா?

நாட்டில் வேலையின்மை, பணவீக்கம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பொருளாதார ஏற்றத் தாழ்வு என்ற விடயங்கள் தாராளமாக மலிந்து போயுள்ளன.

குறிப்பாக நாட்டில் நிலவும் பண வீக்கத்தால் மெய்வருமானம் என்பது மிகவும் விழுக்காட்டையே காட்டி நிற்கின்றது. இந் நிலையில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற மக்கள் மட்டுமன்றி நடுத்தர வர்க்கம் கூட வாழ்க்கைச் செலவிற்காக போராடுகின்றனர்.

அடிப்படை வசதிகள் எதுவுமற்ற மக்கள் தமது சீவனோபாயத்திற்காக படும்பாடு இந்த நாட்டில் நிலவும் நீதியற்ற ஆட்சியின் ஒரு வெளிப்பாடாகும்.

நீண்டகால யுத்தம், அதனால் ஏற்பட்ட செலவு இவை காரணமாக முதலீடு என்பது நாட்டில் ஏற்படவில்லை. முதலீட்டின் மீது அக்கறை காட்டாத ஓர் அரசினால் உற்பத்தியைப் பெருக்கிவிட முடியாது. அதேவேளை முதலீடுகள் இன்மையால் வேலை வாய்ப்பென்பது பூச்சிய நிலையை அண்மித்துள்ளது.

இவ்வாறு நாட்டின் பரிதாப நிலைக்கு கடந்த 20 வருடங்களாக ஆட்சி செய்தவர்களே காரணம் எனலாம். பௌத்தம், சிங்களம் என்ற குறுகிய நோக்கில் இலங்கையை குட்டிச் சுவராக்கிய பேரினவாதிகள் காலம் கடந்தேனும் உண்மையை புரிந்துகொண்டார்களா என்றால் இல்லை என்பதே விடையாக இருக்கும்.

இந் நிலையில் 2005 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் நாளை மறுதினம் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவினால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தால் மக்களின் குறை தீருமா என்பதே இப்போதைய கேள்வியாகவுள்ளது.

ஜே.வி.பியின் தயவில் ஆட்சி நடத்துகின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்க முடியாது.

அரசுடன் சேர்ந்திருந்து கொண்டே அரசுக்கு டிமிக்கு விடும் ஜே.வி.பி. இருக்கும்வரை அரசினால் எந்தவித திட்டங்களையும் துணிந்து எடுக்கமுடியாது என்பது ஜே.வி.பியின் அண்மைக் காலப் போக்குகள் உறுதிசெய்கின்றன.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைபின் அடிப்படையில் அரசு பேச்சுக்களை ஆரம்பித்தால் அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்வோம் எனக் கோரும் ஜே.வி.பி. வரவு - செலவுத் திட்டத்தின் தயாரிப்பில் மட்டும் ஆதிக்கம் செலுத்த மாட்டாது என எங்ஙனம் கூறமுடியும்!

ஆக, நாட்டில் வேலையின்மை, பணவீக்கம், பொருளாதார ஏற்றத்தாழ்வு போன்றவற்றை ஈடு செய்யும் வகையில் அரசின் வரவு - செவுத் திட்டம் அமையுமா? அல்லது ஏழைகளின் வயிற்றில் அடிக்குமாறு எரிபொருள் விலையேற்றம், உணவுப் பண்டங்களின் விலை அதிகரிப்பு, புதிய வரி அறிமுகம் என மக்களின் உழைப்பை சுரண்டுவதாக அமையுமா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

எதுவாயினும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசினால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்திற்குப் பின்னர் நாட்டில் பொருட்களின் விலை அதிகரிப்பு, நாணயப் பெறுமதி இறக்கம், சேமிப்பு வீழ்ச்சி போன்றவை ஏற்படப் போவது திண்ணம்.

இதனை எதிர்ப்பதற்கும், தகுந்த பாடம் புகட்டுவதற்கும் மக்கள் தயாராகவில்லை எனில் ஏழைகளின் வாழ்வு கேள்விக்குரியதாகவே இருக்கும்.

# எண்ணெய் நிறுவனங்கள் தனியாரிடம் படைத்துறைக்கு கடும் பாதிப்பு ஏற்படும்

## ஜே.வி.பியின் தொழிற்சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசுக்குச் சொந்தமான பெற்றோல் நிரப்பு நிலையங்களை தனியார்மயமாக்குவதற்கு ஜே.விபியின் தொழிற்சங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே தனியார் மயமாக்கப்பட்டுவிட்ட நிலையில் பெற்றோல் நிரப்பு நிலையங்களின் மீதான அரசின் கட்டுப்பாடுகளை இழக்கும் வகையிலான இந்த தனியார் மயமாக்கலை எதிர்த்து வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தப் போவதாகவும் அந்த அமைப்பு அறிவித்துள்ளது என ஜே.வி.பி. தொழிற்சங்கத தலைவர் லக்ஷ்மன் ஆனந்தா இதனைத தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, இலங்கை மின்சக்தி மற்றும எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவுடன் இது தொடர்பான பேச்சுக்கள் அதிருப்தி அளிக்கின்றன. இப்பொழுது எங்கள் முன் உள்ள ஒரே வாய்ப்பு வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்துவதுதான். இந்த வேலை நிறுதப் போராட்டம் நடத்தப்பட்டால் படைத்துறை உள்ளிட்ட பெரும் பகுதியில் கடும் பாதிப்புக்கள் ஏற்படும் எனத் தெரிவித்தார்.

இதனிடையே இந்த வேலை நிறுத்த எச்சரிக்கையை நிராகரித்த அமைச்சர் சுசில் இம்முடிவு தவறானது என்றும் இது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்துள்ளார். (க-4)

# ஜனாதிபதி சந்திரிகா 2007 வரை தொடர்ந்து பதவியில் இருப்பார்

## மீண்டும் அமைச்சர் ஜெயரத்தின ஐ.தே.கவுக்கு பதிலடி

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஜனாதிபதி பதவிக்காலம் 2006 ஆம் ஆண்டு டிசமபர் மாதம் முடிவடைகின்றது. இருந்தாலும் அவர் 2007 ஆம் ஆண்டு மார்ச் ஏப்ரல் மாதம் வரை அவர் ஜனாதிபதிப் பதவியில் இருப்பார் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் தபால் தந்தி தொலைத் தொடர்புகள் மலையகப் பகுதி அபிவிருத்தி அமைச்சருமான டி.எம் ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

நேறறுமுன்தினம் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி இரண்டு முறை மக்களால் தெரிவுசெய்யப்பட்டு 12 வருட காலம பதவி வகிக்கலாம். ஆகவே அவரது பதவிக் காலம் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவடைகின்றது.

ஜனாதபதி தனது பதவிக்காலத்தை முழுமையாக முடித்துக் கொண்ட பின் மூன்று மாதத்திற்குள் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும். அதனைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்க மார்ச் ஏப்ரல் மாதமாகும். அது வரை ஜனாதிபதி சட்டப்படி அவர் பதவியில் இருக்க முடியும். அரசின் முதலாவது வரவு- செலவுத் திட்டத்தில் தேர்தலுக்கென நிதி ஒதுக்கப்படவில்லை. ஆதலால் ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடைபெறுவது சாத்தியமில்லை. அரசியலமைபபுச் சட்டம் குறித்து நன்கு அறிந்துள்ள முன்னாள் அமைச்சர் கே.என். சொக்ஸி முன்னாள் சட்ட மா அதிபரும் முன்னாள் அமைச்சருமான திலக் மாரப்பன ஆகியோர் ஜனாதிபதி தேர்தல் குறித்து எதனையும் கூறவில்லை. ஆனால் அரசியலமைப்பு சட்டம் குறித்து முழுமையாக விளங்கிக்கொள்ளாத ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மட்டுமே ஜனாதிபதி தேர்தல் குறித்துக் கருத்துக் கூறி வருகின்றனர்.

அரசியலமைப்புச் சட்டம் தெரியாதவர்கள் சிலர் கூறும் வார்த்தைகளால் ஜனாதிபதியின் பதவிக்காலம் உரிய காலத்திற்கு முன் முடிவடைந்துவிடாது. ஜனாதிபதி 2007 ஆம் ஆண்டு முற்பகுதி வரை அப்பதவியில்இருப்பார் என அவர் மேலும் தெரிவித்தார். (க-4)

# மலையகத் தமிழ் மாணவர்களுக்கு தனியான தொழில்நுட்பக் கல்லூரி

(கொழும்பு)

மலையகத்தில் தமிழ் மாண வர்களுக்கென தனியான தொழில நுட்பக் கல்லூரி ஒன்றை அமைபபதென அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அத்துடன் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் வருடாந்தம் அனும திக்கப்படும் பயிலுநர்களின் எண் ணிக்கையை 125ஆல அதிகரிப்பது என்றும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அமைசசரவைக் கூட்டத்திலேயே மேற்படி முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீபாத கலவியியற் கல்லூரிக்கு பயிலுநர்களின எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான சிபார்சை பெருந் தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு கிராமிய அபிவிருத்தி அமைச்சர் முத்து சிவலிங்கம் அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்தார்.

ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு வருடாந்தம் 250 பேர் அனுமதிக் கப்படுகின்றனர். இவர்களில் 75 வீதத்தினர் தமிழ் மாணவர்களாவர். 25 வீதத்தினர் சிங்கள மாணவர் களாவர்.

இனிவரும் காலங்களில் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு 375 பேரை அனுமதிப்பதென அமைச்சரவை முடிவுசெய்துள்ளது. (க-9)

# வட-கிழக்கு மாகாண ஆளுநராக டிரோன் பெர்னாண்டோ?

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாணடோ நியமிக்கப்படலாம் என அரசாங்கத்துடன் தொடர்புடைய தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது வெளிவிவகார அமைச்சராகப் பணியாற்றிய இவர் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்படாமல் தேசிய பட்டியலில் இடம்பெற்றிருந்தார்.

இருப்பினும் தேர்தல் முடிவின் பின்பு தேசியப் பட்டியலில் இவருக்கு இடமளிக்கப்படவில்லை. இதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சி மீது அதிருப்தியடைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து கொண்டார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் இம் மாதததுடன் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். அவரது இடத்திற்கு வட-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜயவர்த்தனா நியமிக்கப்பட விருக்கின்றார்.

இதன் காரணமாக ஏற்படும் வெற்றிடத்திற்கே டிரோன் பெர்னாண்டோ நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. கோபி அனானின் பதவிக் காலத்தின் பின் இடம் பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச செயலாளருக்கான வேட்பாளராக இவர் தன்னைத் தயார்படுத்திய போதும அது வெற்றியளிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.(க-4)

# கோப்பாய் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கை தீவிரம்

(கோண்டாவில்)

கோப்பாய் பொலிஸார் இரவு நேர ரோந்துப் பணியில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கல்வியங்காடு, கோண்டாவில், உரும்பிராய்,திருநெல்வேலி, இருபாலை, நீர்வேலி ஆகிய பகுதிகளிலும் அதன் பிரதான சந்திகளிலும் மிகத் தீவிரமாக இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

துவிச்சக்கர வண்டிகளிலும் மோட்டார் சைக்கிளிலும் புல்லட் வண்டிகளிலும் ஆயுதம் தரித்த பொலிஸார் இரவு நேரங்களில் திடீர் திடீரெனத் தோன்றி வாகனங்களை சோதனையிடுதல், சந்தேகத்திற்கிடமானவர்களை விசாரித்தல், வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதி அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம, தலைக்கவசம் போன்றவற்றைப் பார்வையிடுதல், இரவுப்பயணத்திற்கான காரணத்தை அறிதல்,அடையாள அட்டையைப் பார்வையிடுதல் போன்ற நடவடிக்கைகளில் மிகத தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் நிலைய பிராந்தியத்தில் இடமபெறும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ப-30,9)

## கடத்திச்செல்லப்பட்ட வாகனங்களின்

# தரிப்பிட மறைவிடங்கள் பொலிஸாரால் முற்றுகை

(கொழும்பு)

கலனிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சப்புகஸ்கந்தப் பகுதியில் கடத்தப்பட்ட வாகனங்களின் தரிப்பிட மறைவிடம் ஒன்றை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.அங்கு பெருந்தொகையான வாகனங்கள் கடத்தப்பட்டு உருமாற்றஞ் செய்யப்பட்டும வாகன இயந்திரம் மற்றும் இலக்கங்கள் மாற்றப்பட்டும் அழிக்கப்பட்டும் இருப்பதாக பொலிஸார் கூறுகின்றனர்.

இதேவேளை, வாகனங்களைப் பறிகொடுத்தவர்களை கலனிய பொலிஸ் நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு கலனியப பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (க)

# தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

நீங்கள் காண்கின்ற இந்த எல்லாப் பொருட்களும் வெறும் கனவுகள். அது இப்போது உங்களுக்குத் தெரிகிறது. பழைய லட்சியவாதிகள் மட்டும் அல்ல தற்கால இயற்பியல் அறிஞர்களும் நாம் காண்பது ஒளியைத்தான். அதிர்வுகளின் வேறுபட்டால்தான் வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று சொல்கிறார்கள்.

சுவாமி விவேகானந்தர்

# தொண்டர் நிறுவன பிரதிநிதிகளுடன் இராணுவத் தளபதி கலந்துரையாடல்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பராமி குலதுங்க மாவட்ட தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுக் காலை 10 மணிக்கு 22 ஆவது இராணுவக் கட்டளைப் பணியகத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பில் இணையத்தின் தலைவர் து.தவிசிலிங்கம் தலைமையில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

இங்கு உரையாற்றிய இராணுவக் கட்டளைத் தளபதி,

அரச அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளின் பணிகளைப் பாராட்டியதோடு, அவர்கள் மக்களின் உண்மையான தேவைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

மீளக்குடியமரும் மக்களின் காணிப் பிரச்சினைகள் குறித்தும், நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றியும் இச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை மக்களின், குறிப்பாக இளைஞர்களின் எதிர்கால வாழ்க்கை கருதி அரசாங்க அமைப்புக்கள் முக்கியமாக செயற்படவேண்டும் என்றும் இராணுவத் தளபதி கேட்டுக்கொண்டார்.

(இ-4)

## சமாதான...

தொடர்கின்றது.

ஜே.வி.பியினர் அரசாங்கத்திற்குள் கூட்டணியாக இருந்துகொண்டு அரசிற்கு எதிராக சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவேண்டாம் என்று கூறுகின்றனர். இது எனக்குத் தெரிந்த வகையில் சமாதானத்தை முன்னெடுக்க உண்மையில் காணபடும் பெரும் தடையாகும்.

ஜே.வி.பி. இக் கொள்கையை விடுத்து மக்களிடம் மன்னிப்புக் கேட்டு சமாதான முயற்சிகளை அரசு முன்னெடுக்க ஜனாதிபதிக்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டும். இதுவே மிகச் சிறந்த சமாதான வழிமுறை என்று ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

(இ-08)







## கிணற்றுள்...

போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மரண விசாரணைகளுக்காக சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்பொழுது குடாநாட்டில் பெய்துவரும் அடைமழை காரணமாக பொம்மைவெளிப் பகுதியில் வெள்ளநீர் நிரம்பிக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

(ச-19)

## கோப்பாயில் திருட்டு

(கோண்டாவில்)

கோப்பாய்ச் சந்தியில் உள்ள தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஓடுபிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் அங்கிருந்த பெருமளவான கிற் காட்டுக்கள், கைத்தொலைபேசி ஒன்று மற்றும் 15 ஆயிரம் ரூபா பணம் என்பனவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ச-130)

## போரில் பாதிப்புற்ற...

தேசியக் கட்சி உட்பட எதிர்த்தரப்பிலுள்ள சகல கட்சிகளும் அரசாங்கத்திற்கு பூரண ஆதரவை வழங்கவேண்டும்.

ஆனால் எதிர்த்தரப்பில் இருக்கும் சில கட்சிகளுக்கும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கும் வகிக்கும் சில கட்சிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் வளர்ந்துகொண்டே செல்வதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இத்தகைய முரண்பாடுகளால் அவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. ஆனால் போரினால் பாதிக்கப்பட்டு விரக்தியடைந்த மக்களுக்கே அது பாதிப்பை கொடுக்கின்றது.

இத்தகைய கட்சிகள் தமக்கு இடையிலான முரண்பாடுகளை வைத்துக்கொண்டு அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கத்தயாராகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)


## போக்குவரத்துச் சபைக்கு...

நிலைமையைக் கேட்டறிந்துகொண்டனர்.

அத்துடன் பொலிஸ் அதிகாரி வீட்டுத்திட்டத் தலைவரை கோண்டாவில் டிப்போவுக்கு அழைத்துச் சென்று உயரதிகாரிகளுடன் நிலைமை குறித்து பேச்சு நடாத்தினார்.

கைதடி வடக்கு, கோயிலாக்கண்டி ஆகிய வீதிகளினூடாக சேவையில் ஈடுபடும் பஸ்கள் நாவற்குழிச் சந்தியூடாகவும் சேவையில் ஈடுபடும் என்றும், அததுடன் நாவற்குழிச் சந்தியிலிருந்து காலை 7.30 மணிக்கு பாடசாலை சேவை ஒன்றை நடாத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது. அத்துடன் அப்பகுதியூடான போக்குவரத்தை கவனிப்பதற்கு ஒரு அதிகாரியை நியமிப்பது எனவும் உறுதியளிக்கப்பட்டது. இதனையடுத்து நண்பகல் 12 மணியளவில் போராட்டம் கைவிடப்பட்டதுடன் ஏ-9 வீதியூடான போக்குவரத்தும் வழமைக்குத் திரும்பியது.

(ச-54,19-47)



உ

சிவமயம்





## புதுக்கடை திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் கார்த்திகை மாதம் 3 ஆம் நாள் (18.11.2004) வியாழக்கிழமை காலை 10.45 மணிமுதல் 11.45 மணிவரையான மகர லக்கினமும், திருவோண நட்சத்திரமும் கூடிய சுபவேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**"சுந்தர்சன்"**

**SUNDHARSON**

என்னும் புதுக்கடைட்யை ஆரம்பிக்கவுள்ளதால், அத்தருணம் தாங்களும், தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்**

யாழ் வீதி
மானிப்பாய்.

உரிமையாளர்
**சுந்தர்சன்**

T.P - 021 - 222 -2751, SUNTEL - 4591569 FAX 021 - 222 - 2751

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பிதழாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்)

(சி-732)

## பூசகர் பலியான சம்பவத்திற்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் இராமாவில் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவ தண்ணீர் பவுஸர் மோதி பூசகர் பலியான சம்பவத்திற்கு சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் தமது வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது. இதேவேளை அச்சம்பவம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் கல்வியங்காட்டைச் சேர்ந்த வ.அரியகரசர்மா மரணமாகியிருந்தமை தெரிந்ததே. (ச)

## மரண அறிவித்தல்



### சீனியர் சிந்தாமணி

பலாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை தற்காலிக முகவரியாகவும்கொண்ட சீனியர் சிந்தாமணி 12.11.2004 அன்று காலமானார். இவர் உரும்பிராயை சேர்ந்த கண்மணியின் அன்புக் கணவரும், தர்மசாந்தினி, நிமலசாந்தினி, நகுலசாந்தினி, ஸ்ரீக்குமார், திருக்குமார், சுமதசாந்தினி, ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 16.11.2004 இன்று பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெறும் என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு**
**(முருகன் வீதி)**

**தகவல்:**
**மகன் சி.றகு**

(9011)

## வலி.கிழக்கு பிரதேச சபையின் முக்கிய அறிவித்தல்

01.11.2004ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல், பத்திரிகையின் 2005 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல் விளம்பரத்திற்கு அமைய மேலதிகமாக கேள்விப்பத்திரம் வழங்கும், ஏற்றுக்கொள்ளும், திறக்கப்படும் திகதிகள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி -**
**19.11.2004 ஆகவும்,**
**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி -**
**23.11.2004 ஆம் திகதி 12.00 மணிவரை ஆகவும்,**
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி -**
**23.11.2004 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.**

அச்சுவேலி சந்தை மாட்டிறைச்சிக்கடை இல.21 கோழி/கோழி இறைச்சி விற்கும் கடையாக மாற்றப்பட்டுள்ளது என்பதனையும், அதன் கேள்விக் கட்டண விபரம் பின்வருமாறு அமையும் என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| கேள்விப் பத்திரப் பணம் (வற்வரி நீங்கலாக) | கேள்வி வைப்பு | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (வற்வரி நீங்கலாக) |
|---|---|---|
| 200.00 | 500.00 | 12,000.00 |

**எவ்வித காரணம்கொண்டும் மீள்கேள்வி கோரப்படமாட்டாது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.**

**வலி. கிழக்கு பிரதேசசபை,**
**தலைமை அலுவலகம், நீர்வேலி,**
**15.11.2004**

**இராசரத்தினம் இராசதுரை**
செயலாளர்
வலி.கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி

(C/733)

## பதவி வெற்றிடம்

**ஓவ்செற் பயிலுநர்கள் (இரவுக்கடமை)**

**பத்திரிகை விநியோகஸ்தர்கள்**

**(யாழ். நகர மையத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்திற்குள் உள்ள, சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் மட்டும்.)**

**தகுதியானவர்கள் நேரில் வரவும்.**

**வலம்புரி,**
**15, வெள்ளாந்தெரு**
**யாழ்ப்பாணம்.**

**நிர்வாக உத்தியோகத்தர்**

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.